# இலக்கில்லா பயணம்

## 1

செல்வி நீரஜா பார்க்க லட்சணமானவள். ஐந்தடி மூன்றங்குலம். முப்பத்தாறு. இருபத்து மூன்று புள்ளி ஐந்து. முப்பத்தேழு அளவுள்ளவள். தைரியமானவள். எப்போதும் ஸ்டார்ச் போட்டு மொடமொடப்பாகக் காய வைத்து, ஐயர்ன் செய்யப்பட்டப் பருத்திப் புடவை களையே கட்டுபவள்.

அவளுடைய புடவைகள் அத்தனையும் வெளிர் நிறத்தவை. அவள் அணியும் சோளிகள் நல்ல அடர்த்தி யான நிறமுள்ளவை. வாழ்க்கையில் முரண்பாடுகளை அவள் மிகவும் விரும்புகிறவள். எனவே லைட் கலர் புடவைக்கு டார்க் நிற ரவிக்கை என்ற ஒரு கான்ட்ராஸ்ட்

டேஸ்டில் உடை உடுத்தும் மனோபாவம் கொண்டவள். காரின் ரியர்வ்யூ மிர்ரரில் தொங்க விடப்பட்ட குழந்தை பொம்மையின் கவுன் புஸ்ஸென்று விரிந்திருப்பது போல செல்வி நீரஜாவின் புடவையும் புஸ்ஸென்று விரிந்து, அவள் ஒல்லி என யாரும் நினைத்து விடாதபடி பார்த்துக் கொள்ளும்.

செல்வி நீரஜா தைரியமானவள் என்று ஏற்கனவே சொல்லியாகி விட்டது. இப்போது அவள் தைரியத்திற்கு எடுத்துக்காட்டு. பெண் என்ற காரணத்தால் அவள் அலங்காரப் ப்ரியை. அலங்காரப் ப்ரியை என்பதால் புடவை எப்போதும் இடுப்புக்குக் கீழ். கவர்ந்திழுக்கும் மெலிதான சுழி, சுழியிலிருந்து துவங்கும் செம்பட்டை நிறத்து மெலிதான முடி, சந்தனமும் தந்தமும் சேர்த்து அரைத்துப் பெற்ற நிறத்தில் வார்க்கப்பட்ட அவள் உடல் நிறம், பின் முதுகில் சோளி கீழிறக்கித் தைக்கப்பட்டதால் தெரியும். அவளது அதிவசீகரமான முதுகு எல்லாவற்றையும் அவள் எக்ஸிபிஷன் ஸ்டால் போல மற்றவர்களுக்குக் காட்டுவாள். அவள் கண்களில் எப்போதும், 'தொடாமல் பார்க்கவும்' என்ற எச்சரிக்கை போர்டு தொங்கிக் கொண்டே இருக்கும்.

ஒரு முறை பஸ்ஸில் ஒருவன் தொட்டான். பின்னிடுப்பில். முதல் முறை உதாசீனம் செய்தாள். இரண்டாம் முறை தொட்டான். திரும்பிப் பார்த்து, ''தயவு செய்து வேண்டாம், ப்ளீஸ்'' என்று கெஞ்சும் குரலில் சொன்னாள். அவளது வேண்டுகோள் அவளை ஒரு மருண்ட பெண் மானாக அவனுக்குக் காட்டியது. தொட்டான். அவள் திரும்பி, ''இங்கே வேண்டாம். எங்கேயாவது தனியாகப் போகலாமா?'' என்று கேட்க, அவன் தேன் குடித்த



வண்டாக, திராட்சை தின்ற நரியாக, வடை உண்ட காகமாக மாறி இளித்து, தன் சம்மதத்தை உடன் உடன் தெரிவித்து, அடுத்த நிறுத்தத்தில் அவள் பஸ்ஸில் இருந்து இறங்கினாள். அவனும்.

''தள்ளி நடந்தால் சந்தேகம் வரும். கை கோர்த்துக் கொண்டு நடக்கலாமே'' என்றாள்.

''ஓ யெஸ்'' என்று அவன் விரல்களைக் கொடுத்தான்.

அந்த விரல்கள் தளர்ந்து இருந்தன. உற்சாகத்தில், எரிமலை மகிழ்ச்சியில் லேசாக நடுங்கிக் கொண்டிருந்தன.

அவள் அந்த விரல்களைப் பற்றினாள். மெதுவாக. அப்புறம் வலுவாக.

கண்ணன் பூதகியின் மார்பில் பால் உறிஞ்சிக் குடித்த போது என்ன சக்தியை உபயோகித்தானோ அதே சக்தியை உபயோகித்து, அவள் தன் கைவிரல்களால், அவன் கை விரல்களை ஒரே மடக்காய் பின்னால் மடக்கி - மளுக்.

அவன் நடுச்சாலையில் நின்று ''ஐயோ'' என்று அலறினான். அவள் கடந்து சென்ற ஓர் ஆட்டோவை நிறுத்தி, அதில் ஏறிப் பயணத்தைத் தொடர்ந்தாள்.

செல்வி நீரஜா ஒரு பாங்க்கில் டைப்பிஸ்ட். குறைந்த வேலை. நிறைந்த சம்பளம். செல்வி நீரஜா அந்த சம்பளத்தில் சென்னையில் அண்ணா நகர் மேற்கில், திருமங்கலம் பிரதேசத்தில் வரிசையாய் தீப்பெட்டி, தீப்பெட்டியாய் இருக்கும். அபார்ட்மெண்ட்களில் ஒரு ப்ளாட்டில் தன் ஒரே பெண்ணோடு வசிப்பவள். பெண்? காவ்யா. மூன்று வயது. எல்கேஜிக்காக ஸ்கூலுக்குப் போகும் நேரம் தவிர மற்ற நேரங்களில் மேற்கு அண்ணா நகரின் ஏதோ ஒரு ப்ளாக்கின், ஏதோ ஒரு குறுக்குத் தெருவில் இருக்கும் ஜவஹர் குழந்தைகள் காப்பகத்தில் இருப்பவள்.

செல்வி நீரஜா பிடிவாதக்காரி. அவள் பிடிவாதக்காரி என்பதற்கு எடுத்துக்காட்டு, கல்யாணமான பின் கணவனுடன் ஏற்பட்ட கருத்து வேற்றுமை காரணமாக அவனை டைவர்ஸ் செய்துவிட்டு, அந்தக் கணவனை அவளுக்குக் கட்டி வைத்தார்கள் என்பதற்காக அப்பா அம்மாவுடன் கோபித்துக் கொண்டு, தன் ஒரே மகள் காவ்யாவுடன் ஒன் பெட்ரூம் அபார்ட்மென்ட்டில் வசிப்பவள். அப்பா அம்மா எவ்வளவு அழுது புரண்டு அழைத்தும் போகாதவள்.

ஜுரம் வந்தாலும், குளிர் வந்தாலும், இருமல் வந்தாலும், பொருமல் வந்தாலும், சளி வந்தாலும், கிலி வந்தாலும் அவளுக்குக் காவ்யா. காவ்யாவிற்கு அவள்.

இன்றைய பொழுது செல்வி நீரஜாவிற்கு விடிந்த போது காலை மணி ஆறு. திங்கட்கிழமை. ஆறு நாட்களாக அபார்ட்மென்டில் அடைந்து கிடந்தாள். அதற்கு முன் இரண்டு நாட்கள் காவ்யாவுடன் ஆஸ்பத்திரியில், காரணம் வைரல் பீவர். நீரஜாவிற்கு. காவ்யாவை ஏற்கனவே வைரல் பீவர் தாக்கி விட்டு, தவிக்க விட்டு, இடம் மாற்றிக் கொண்டு நீரஜாவின் உடலில் குடி புகுந்ததால், நீரஜாவை காய்ச்சல் கொஞ்சம்கூட ஈவிரக்கமின்றி தாக்கு தாக்கு என்று தாக்கி விட்டது.

உடம்பின் ஒவ்வொரு மூட்டிலும் வலி. நாக்கில் கசப்பு. கண்ணில் சூடு. நெஞ்சில் இருமல். வயிற்றில் வாய்வு. காதில் அடைப்பு. இரண்டு நாட்களுக்கு உணவு கொள்ளவில்லை. பக்கத்து அபார்ட்மென்ட் பத்மா, காபிப் பொடி இரவல் வாங்க வந்து, நீரஜாவைப் பார்த்துப் பதறி, அருகில் கீழே அமர்ந்து பிளாஸ்டிக் க்யூப்களில் வீடு கட்டிக் கொண்டிருந்த காவ்யாவைப் பார்த்து மனமுருகி,



ஆஸ்பத்திரியில் சேர்த்து, சிகிச்சைக்குப் பின் குணமாகி - ஆறு நாட்களாக ஓய்வு.

உடலில் தெம்பு வருவதற்காக டாக்டர் வைட்டமின் அடங்கிய காப்ஸ்யூல் ஒரு பாட்டில் எழுதிக் கொடுத்திருந்தார். காலை, மதியம், இரவு மூன்று வேளை. மூன்று காப்ஸ்யூல்கள். நீரஜா குழந்தையைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவே வேளைக்கு இரண்டு மாத்திரைகளாகச் சாப்பிட்டாள்.

இப்போது, காலையில் உடல் இன்னும் களைத்துப் போன மாதிரித்தான் இருந்தது. குளித்தால் சரியாகி விடும். ஏதாவது செய்து சாப்பிட்டால் சரியாகிவிடும். காவ்யாவை க்ரீஷில் கொண்டு போய் விட்டால் சரியாகி விடும். பாங்க் போய் டைப்ரைட்டர் முன்னால் உட்கார்ந்தால் சரியாகி விடும்.

நீரஜா தனக்குத்தானே ஒரு வேலைப்பட்டியல் போட்டுக் கொண்டாள். சுறுசுறுப்பு வரவேண்டுமெனில் குளிக்க வேண்டும். படுக்கையிலிருந்து தரைக்கு நழுவினாள். கொசுவலை கொண்டு அடைக்கப் பட்டிருந்த ஜன்னலைத் திறந்தாள். வெளியே வெயில் கடை விரித்திருந்தது. இளம் வெயில். இன்னும் சிகப்புத் தன்மை மாறாதது. அபார்ட்மென்ட் அடுக்கை ஒட்டி வளர்ந்திருந்த ஒரு நாகலிங்க மரத்தில் ஒரு வினோத பட்சி அமர்ந்திருந்தது. நீரஜா ஜன்னல் கதவு திறந்தவுடன், சத்தம் கேட்டு, அது தன் கருநீல நிறக் கழுத்தை வளைத்துத் திரும்பி நீரஜாவைப் பார்த்து, 'கார்க் கூய்' என்று குரல் எழுப்பியது.

என்ன பட்சி அது என்று ஆந்த்ரபாலஜிஸ்டுகளைக் கேட்டால் தெரியும். எங்கே போய்த் தேடுவது இந்நேரத்

திற்கு அவர்களை பட்சி அழகா? பார். மகிழ், நீ உன்னைச் சுற்றி உள்ளவர்கள்.

காவ்யாவிற்குக் காட்ட வேண்டும் என்று தோன்றியது. எழுப்பினாள்.

''குட்மார்னிங் காவ்யா.''

''குட்மார்னிங் மம்மி.''

''ஜன்னலுக்கு வெளியே பார். எவ்வளவு அழகாய் ஒரு பறவை.''

காவ்யா கட்டிலில் நகர்ந்து ஜன்னல் அருகே அமர்ந்து, கன்னத்தைத் தன் உள்ளங்கையால் தாங்கி வெளியே பார்த்தாள்.

''ஐ.''

''பார்த்துக் கொண்டு இருக்கிறாயா? அம்மா போய்க் குளித்துவிட்டு வருகிறேன்.''

''ம்.''

நீரஜா பாத்ரூமிற்குள் நுழையுமுன் மறுபடி களைப்பாய் உணர்ந்தாள். ஷெல்ப்பில் இருந்த வைட்டமின் காப்ஸ்யூல் பாட்டிலை எடுத்துத் திறந்து, இரு மாத்திரைகளைப் போட்டுக் கொண்டு, ஒரு டம்ளர் நீர் குடித்து விழுங்கினாள். நெஞ்சு நீவி விட்டுக் கொண்டாள்.

பாத்ரூமில் நுழைந்து நைட்டியைக் களைந்தாள்.

காவ்யா வினோதப் பறவையைக் கொஞ்ச நேரம் வேடிக்கைப் பார்த்தாள். அது ஜிவ்வென்று டேக் - ஆஃப் செய்து மறைந்ததும், கொஞ்ச நேரம் வெயிலைப் பார்த்தாள். கீழே தெரிந்த சிமெண்ட் பாதையில் வண்டியை



உருட்டிச் சென்ற தலைப்பாகை கட்டின காய்கறிக் காரனையும், வெற்றிலை போட்டுக் குதப்பின வாயுடன், ''கத்தேரிக்கா, வெண்டேக்கா, அவரேக்கா'' என்று முழங்கிய காய்கறிக்காரியையும் பார்த்தாள். போரடித்தது. ஏ, பீ, ஸீ, டி சொன்னாள். போரடித்தது. ஒன், டூ, த்ரீ சொன்னாள். போரடித்தது.

பாத்ரூம் கதவை நெருங்கினாள்.

''மம்மீ.''

பதில் வரவில்லை. பாத்ரூமில் ஷவர் ஜர் என்று நீர் பீய்ச்சும் சத்தம் கேட்டுக் கொண்டிருந்தது.

கதவைத் தட்டினாள். பதிலில்லை.

''மம்மீ. கதவைத் திற மம்மீ.''

ஷவரின் ஜர்ர்ர் இன்னும்.

காவ்யாவை பயம் பற்றிக் கொண்டது. அம்மா ஏன் பாத்ரூமில் இருந்து பதில் சொல்ல மாட்டேன் என்கிறாள்.

அவள் ப்ளாட் கதவைத் திறந்து வெளியே வந்து பக்கத்து ப்ளாட் பத்மாவை அழைத்தாள்.

பதினைந்து நிமிடங்களுக்குப் பின் பாத்ரூம் கதவு உடைத்துத் திறக்கப்பட்டபோது, நீரஜா பாத்ரூமின் நீல ஸ்பார்க்கெட் ஓடுகளின் பின்னணியில் தரையில் கலைந்த ஓவியமாக விழுந்திருந்தது தெரிந்தது.

பத்மா ஹாங்கரில் மாட்டியிருந்த நைட்டியை அவசர அவசரமாக எடுத்து உடலில் போர்த்தினாள். ஷவரை நிறுத்தினாள்.

நீரஜாவின் மூக்கருகே கை வைத்து சுவாசம் பார்த்தாள். நீரஜா எப்போதோ செத்துப் போயிருந்தாள்.

# 2

அந்த அபார்ட்மென்ட்டிற்கு முதன் முறையாக போலீஸ் வந்தது. போலீஸ் நாய் மோப்பம் பிடித்தது. நாய் அந்த வீட்டைச் சுற்றிச் சுற்றி வந்ததே ஒழிய வேறெதுவும் செய்யவில்லை.

நீரஜாவின் திடீர் மரணத்திற்கு யாருக்குமே காரணம் தெரியவில்லை. தற்கொலை செய்து கொள்ளும் அளவு நீரஜா கோழை இல்லை. போலீஸ் டிபார்ட்மென்ட்டின் அடுத்தடுத்த ப்ளாட்களில் வசிக்கும் ஏதோ ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர் பாரன்ஸிக் லாபில் வேலை செய்பவர் என்பதாலும், அவர் ப்ளாட்டில் போன் வசதி இருக்கிறது என்பதாலும் வந்து விட்டது.

நீரஜாவைப் பார்க்கும் யாருக்கும் அவள் ஒரு மாரடைப் பில் இறந்து போன மாதிரித்தான் தெரிந்தது. எங்கேயும் காயமில்லை. எங்கேயும் வீக்கமில்லை. ரத்தக் கசிவில்லை. முகத்தில் வேதனை இல்லை. லேசான புன்முறுவல். மூச்சு நிற்கும் நொடியில் நீரஜா காவ்யாவைப் பற்றி ஏதாவது யோசித்தாளோ என்னவோ அதனால் புன்முறுவல்.

போலீஸ், அவளுடைய பின்னணியை ஆராய்ந்தது. டைரி, ஷெல்ப், சமையல் அறையில் இருக்கும் டப்பாக் கள், எந்த டப்பாவிலும் அவர்களுக்கு எந்த காதல் கடிதமும் கிடைக்கவில்லை. எந்த டைரியிலும் அவள் யாரிடமும் ஏமாந்ததாக எழுதவில்லை. அவள் டைரி முழுக்க முழுக்க செலவு கணக்குதான். அமெரிக்கன் டயமன் பொருத் தப்பட்ட தோடு மோதிரம், சானிடரி டவல். மளிகை.



காவ்யாவிற்கு ட்ரெஸ். குழந்தைகள் காப்பகத்திற்கு கொடுத்த பணம். முழுக்க முழுக்க செலவு கணக்குதான்.

எப்போதோ கணவனை விட்டுப் பிரிந்த நீரஜா, இப் போது இப்படி திடுதிப்பென யாரிடமும் சொல்லிக் கொள் ளாமல் இறந்து போக என்ன காரணமாக இருக்க முடியும்?

போலீஸ்காரர்கள் குழம்பினார்கள். சுற்றிலும் இருந்த ப்ளாட்களில் விசாரித்து நீரஜா தைரியசாலி, பிடிவாதக் காரி, ஆண்களை ஏறெடுத்தும் பாராதவள் என்பன போன்ற விஷயங்களை எல்லாம் தெரிந்து கொண்டார்கள்.

பின் எந்தக் காரணமுமின்றி ஏன் இந்தச் சாவு?

அரசாங்க டாக்டர்தான் அதைத் தெரிவிக்க முடியும் என்று தீர்மானித்தார்கள்.

ணிங் ணிங் கென்று ஆம்புலன்ஸ் வந்தது. காம்பவுண் டில் ஆம்புலன்ஸிற்குப் பின்னாலேயே ஒரு கார் வந்தது. காரில் இருந்து நீரஜாவின் அம்மாவும், அப்பாவும் இறங்கி, "மகளே, மகளே" என்று அங்கிருந்தே கத்திக் கொண்டு படியேறினார்கள்.

ஆஸ்பத்திரி ஸ்ட்ரெச்சரில் நீரஜா கிடத்தப்பட்டாள். சந்தனமும், தந்தமும் கலந்த நிறம் என்று, நீரஜாவின் உடலில் வந்தமைந்திருந்த நிறமே தற்பெருமை கொண் டிருந்தது. இப்போது அந்த நிறம் லேசாக மாறிக் கொண் டிருந்தது. ஒரு மாதிரி மஞ்சளாக, சரித்திரக் கதையாசிரி யர்களின் வர்ணனைக்குத் தோதாக இருந்தது.

ஸ்ட்ரெச்சர் ஆம்புலன்ஸில் நுழைந்தது. ஆம்புலன்ஸ் நகர்ந்தது.

காவ்யாவை தாத்தாவும் பாட்டியும் வாரி அணைத்துக் கொண்டார்கள்.

"மம்மீ," "மம்மீ" என்று ஒரு விரல் நீட்டி ஆம்புலன்ஸைப் பார்த்த காவ்யா அலறிய அலறலில் அபார்ட்மெண்ட் மக்கள் அத்தனை பேர் கண்களிலும் நீர் கசிந்தது.

அரசாங்க ஆஸ்பத்திரி டாக்டர் நீரஜாவின் உடலை நீட்டு வாக்கில் குறுக்கு வாக்கில் என்று எல்லா ஜியோ மிதிக் கோணங்களிலும் அறுத்தார். ஒவ்வொரு துண்டுச் சதையாக எடுத்து ஒவ்வொரு திரவத்தில் போட்டுப் பார்த்தார். ஒவ்வொரு எலும்பாகத் தட்டிக் கொட்டிப் பார்த்தார். கருப்பையில் கரு இருக்கிறதா? இல்லை. வன்முறைக்குட்படுத்தப் பட்டிருக்கிறாளா? இல்லை.

கபால எலும்பு, நெற்றிப் பொட்டெலும்பு என்று எங்காவது அடிபடக் கூடாத இடத்தில் அடிபட்டிருக் கிறாளா? இல்லை. வயிற்றில் உணவில் ஏதாவது விஷம் இருக்கிறதா? வயிற்றில் உணவே இல்லை. நீரஜாவின் மரணத்திற்குக் காரணம் தேடிய டாக்டரின் நெற்றி வியர்த்தது. நாடித் துடிப்பு எகிறியது.

நீரஜா இதய நிறுத்தத்தால் இறக்கவில்லை. ஸெரிப்ரல் ஹெமரேஜால் சாகவில்லை. ப்ளட் கான்ஸர், சயனைட் என்று எதனாலும் அவள் இறக்கவில்லை. பின் ஏன் இறந்தாள்?

இவ்வளவு இளம் வயதில், பாத்ரூமில் வெது வெதுப் பான வென்னீருக்குக் கீழே குளித்துக் கொண்டிருக்கும் ஒரு ஆரோக்கியமான பெண் இறப்பதற்கு எந்தவித சாத்தியக் கூறும் பிரேத பரிசோதனையில் தெரியவில்லை. பின் என்னவென்றுதான் ரிப்போர்ட் கொடுப்பது.

இந்த யோசனைக்குப் பிறகு கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் கழித்து டாக்டருக்கு மூளையில் அந்த மின்னல் வெட்டியது. வயிற்றுக்குள் இரு கரையாத காப்ஸ்யூல்கள்



இருந்தன. அவை வெறும் விட்டமின் மாத்திரைகள். அதை என்ன பார்ப்பது என்று அவர் முதலில் அசட்டை யாக இருந்து விட்டார். இப்போது அதைப் பிளந்து பார்த்து விடுவது நல்லது என்று தோன்றியது.

பிளந்தார். பார்த்தார். திகைத்தார்.

காப்ஸ்யூலுக்குள் இருந்த மருந்து உடலுக்குச் சக்தி தரும் வைட்டமின் சமாச்சாரமில்லை. அது ஒரு ஆர்சனிக் விஷம். ஸ்லோ பாய்சன். மெது மெது மெதுவாக ஆளைக் கொல்லும் ஆட்கொல்லி.

இதனால்தான் நீரஜாவின் இதயம் ஓய்ந்திருக்கிறதா?

இதனால்தான் இவளுடைய தோல் மஞ்சள் கலந்த தளிர் இலைப் பச்சை நிறத்தில் இருக்கிறதா? மஞ்சள் தேய்த்துக் குளித்ததால்தான் இந்த நிறம் என்று நினைத் தது எவ்வளவு முட்டாள்தனம்.

அரசாங்க டாக்டர் பெருமூச்சு விட்டார்.

தமது பிரேத பரிசோதனை அறிக்கையைத் தயாரித்தார். காவல் துறையிடம் சமர்ப்பித்தார்.

காவல்துறை திகைத்தது. வைட்டமின் காப்ஸ்யூலில் ஆர்சனிக் விஷமா? இது எப்படி சாத்தியம்?

நீரஜாவின் ப்ளாட்டில் இருந்த அந்த வைட்டமின் காப்ஸ்யூல் கொண்ட பாட்டில் எடுத்து வரப்பட்டு, உடைத்து ஆராய்ச்சி செய்யப்பட்டது.

அத்தனை காப்ஸ்யூல்களிலும் ஆர்சனிக் விஷம். எப்படி வந்தது இந்த விஷம்.

காப்ஸ்யூல்களை உற்பத்தி செய்த கம்பெனி, மார்க் கெட்டில் மிகவும் போற்றப்படுகிற மருந்துக் கம்பெனி. தரமான மருந்துகளைத் தயாரிக்கும் கம்பெனி என்று

மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காகவே கம்பெனியின் பெயரை, 'பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸ்' என்று வைத்துக் கொண்டிருந்தது.

பெஸ்ட் பார்மாசூட்டிகலில் இருந்து இப்படி ஒரு மருந்து என்றால் கம்பெனி என்ன ஆகும்?

தயாரிப்பின்போது நடந்த கோளாறு என்றால், இப்படி ஒரு கோளாறு எப்படி வரமுடியும்?

காவல் துறையினர் அந்த வைட்டமின் காப்ஸ்யூல்கள் அடங்கிய பாட்டில்களை உடனே மருந்துக் கடைகளில் இருந்து சேகரித்து பாரன்ஸிக் லாபுக்கு அனுப்புமாறு ரகசிய அறிக்கை ஒன்றை பெஸ்ட் பார்மாசூட்டிகலுக்கு அனுப்பியது.

அந்தச் செய்தி எப்படியோ, ஒரு ஆர்வம் கொண்ட பத்திரிகை நிருபரை எட்டியது.

அன்றைய மாலைச் செய்தித்தாள் ஒன்று பெரிய பெரிய கொட்டை கொட்டை எழுத்தில் அலறியது.

மருந்துக் கம்பெனியின் மோசடி

## 3

மொத்தம் நான்கே நான்கு பாட்டில்களில் மட்டும் அந்த ஆர்சனிக் விஷம் நிறைந்த காப்ஸ்யூல்கள் இருந்தன. அந்த நான்கு பாட்டில்களும் பாரிமுனையில் இருந்த ஒரு மருந்துக் கடையில் இருந்து சேகரிக்கப்பட்டதாக பெஸ்ட் பார்மாசூட்டிகல்காரர்கள் சொன்னார்கள். பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸின் மேனேஜிங் டைரக்டரே நேராக போலீஸ் கமிஷனர் அலுவலகத்திற்கு வந்திருந்தார். அவர் முகம் ரத்த சோகையால் பீடிக்கப்பட்ட முகம் போல் சவ வெளுப்புடன் காணப்பட்டது.



''ஸார்'' என்று மரியாதை மிகுந்த ஆக்ஸ்போர்ட் இங்கிலீஷில் தொடங்கினார் பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸின் மேனேஜிங் டைரக்டர்.

''எங்கள் கம்பெனிக்கு இதுவரை இந்த மாதிரி அவப் பெயரே வந்ததில்லை. இது எங்கள் கம்பெனியை இழுத்து மூடும் நிலைக்குக் கொண்டு வந்து விடும் போல் இருக்கிறது. மொத்தம் நான்கு பாட்டில்களில்தான் இந்த ஆர்சனிக் விஷம் அடங்கி இருக்கிறது. எப்படி என்று எங்களுக்குத் தெரியவில்லை. எங்கள் கம்பெனியில் ஆர்சனிக் விஷத்தை நாங்கள் வரவழைப்பதே இல்லை. இந்த காப்ஸ்யூல்களில் மட்டும் எப்படி அந்த விஷம் இருக்கிறது என்றே எங்களுக்குத் தெரியவில்லை. தயவு செய்து இந்த விஷயத்தைப் பெரிதாக்க வேண்டாம். அமுத்தி விடுங்கள் சார். எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை.''

''நீங்கள் சொல்வதெல்லாம் சரி. ஆனால் பத்திரிகைக் காரர்கள் உள்ளே நுழைந்து விட்டார்களே. நான் இனிமேல் ஒன்றும் செய்ய முடியாது.''

''பத்திரிகைக்காரர்களை நான் பார்த்துக் கொள்கிறேன்.''

''அப்படி என்றால்.''

''......''

''நீங்கள் பத்திரிகைக்காரர்களை விலைக்கு வாங்கப் போவதாகச் சொல்கிறீர்களா?''

''வேறு வழி. எங்கள் கம்பெனி பப்ளிக் லிமிடெட் கம்பெனி. மார்க்கெட்டில் எங்கள் ஷேர் நல்ல விலைக்குப் போகிறது. இந்த சமயத்தில் எங்கள் மருந்தின் பேரில் மக்களுக்கு நம்பிக்கை இல்லாமல் போனால் நாங்கள் சரிந்து விடுவோம். ஒரு பெரிய நிறுவனம் அப்படியே பொடிப் பொடியாய் நொறுங்கிப் போய்விடும்.''

''அந்த நான்கு பாட்டில்களும் பாரீசில் ஏதோ ஒரு கடையில் இருந்து கலெக்ட் பண்ணப்பட்டதாக உங்கள் ஸ்டேட்மென்ட் சொல்லியிருக்கிறதே.''

''ஆம்.''

''அந்த கடைக்காரனைப் பிடித்து உலுக்கினால் என்ன?''

''நோ, நோ. அந்த கடைக்காரர் எங்களுடைய வோல் சேல் டிஸ்ட்ரிப்யூட்டர். நேர்மையானவர். பழி பாவத் திற்குப் பயப்படுகிறவர். நாங்கள் கொடுக்கும் மருந்தை அப்படியே விற்பவர். அவர் இந்த மாதிரி எல்லாம் எதுவும் செய்ய மாட்டார். மேலும் இப்படிச் செய்வதால் அவருக்கு என்ன லாபம்? லாபம் இருப்பதாக இருந்தால் எல்லா பாட்டில்களிலும் அப்படி இருக்க வேண்டும். இல்லையே. வெறும் நான்கு பாட்டில்களில் மட்டும் தானே. அவரே தெரிந்து செய்திருந்தால் அந்த பாட்டில்களை அவர் வேறு ரீடெய்ல் கடைகளுக்குக் கொடுத்திருக்க மாட்டாரா? ப்ளீஸ். அவரை கொஸ்சன் பண்ணாதீர்கள். விட்டு விடுங்கள். இப்போது மார்க்கெட்டில் இந்த நான்கு பாட்டில்களில் மட்டும்தான் இந்த ஆர்சனிக் விஷம் கொண்ட காப்ஸ்யூல்கள் இருப்பதாகக் கண்டு பிடித்திருக் கிறோம். இனிமேல் இந்த வைட்டமின் காப்ஸ்யூல்களால் யாருக்கும் எந்த பாதிப்பும் வர சான்ஸ் இல்லையே. பொது



மக்களிடம் யாரிடமாவது இந்த காப்ஸ்யூல்கள் கொண்ட பாட்டில்கள் இருந்தால் உடனே எங்களுக்கு அனுப்புமாறு பேப்பர்களில், ரேடியோவில், டெலிவிஷனில் எல்லாம் அறிக்கை விட்டிருக்கிறோம். ஒவ்வொரு பாட்டிலுக்கும் ரூபாய் நூறு பரிசு என்று சொல்லியிருக்கிறோம். பத்து ரூபாய் காப்ஸ்யூல் இது. நூறு ரூபாய்க்காக நிச்சயம் எங்களிடம் இந்த காப்ஸ்யூல்கள் திரும்ப வந்து சேர்ந்து விடும். அவற்றில் எந்த பாட்டிலிலாவது அந்த விஷ காப்ஸ்யூல் இருக்கிறதா என்று பார்க்கிறோம். இருந்தால் அந்த காப்ஸ்யூலைத் தின்றவர்களுக்கு என்ன ட்ரீட் மென்ட் கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுத்து விடுகிறோம். தயவு செய்து ஊதாதீர்கள் சார்.''

''ரைட் சார். பப்ளிக்கைப் பொறுத்த வரை நீங்கள் சொல்வது சரி. ஆனால் டிபார்ட்மென்டைப் பொறுத்த வரை? ஒரு மரணம். ஒரு இளம் பெண் இறந்து போயி ருக்கிறாள். அந்தக் கேஸை நாங்கள் ஸால்வ் பண்ணியே ஆக வேண்டும். அந்தப் பெண் இந்த காப்ஸ்யூலில் இருக்கும் விஷத்தால் செத்துப் போயிருக்கிறாள் என்று தெரிகிறது. காப்ஸ்யூலில் எப்படி ஆர்சனிக் விஷம் வந் திருக்கிறது என்று கண்டு பிடிக்க வேண்டாமா? இது தற்செயலான விபத்தா, இல்லை திட்டமிட்டு நடத் தப்பட்டதா என்ற அறிந்து கொள்ள வேண்டாமா? அந்த பைல் க்ளோஸாகும் வரை எங்களுக்கு இந்த பிரச்னை உயிருள்ள பிரச்னைதான்...'' என்ற கமிஷனர் உள்ளே வந்த காபி பையனிடம் எதிரில் இருப்பவருக்கு காபி வைக்குமாறு சைகை செய்தார்.

அவர் டேபிளில் இருந்த போன் மணி ஒலித்தது.

''எக்ஸ்க்யூஸ் மீ'' என்று பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸின் மேனேஜிங் டைரக்டரிடம் நாசுக்கு மன்னிப்பு கேட்டுக் கொண்டு போனை எடுத்தார்.

''யெஸ்... யெஸ்... யெஸ்...'' என்று ஐந்தாறு ஆமாம் களையும், ஒன்றிரண்டு அப்படியாக்களையும் உதிர்த்த போலீஸ் கமிஷனர் போன் ரிசீவரை வைத்தபோது அவர் முகத்தில் கவலை அதிகரித்திருந்தது.

''ஸாரி மிஸ்டர் எம்.டி. உங்கள் கேஸ் முடியவே முடியாது.''

''ஸார்?'' என்றார் திகைப்புடன் எம்.டி.

''அண்ணாநகர் போலீஸ் ஸ்டேஷனில் இன்னொரு கம்ப்ளெயின்ட் ரிஜிஸ்டர் ஆகியிருக்கிறது.''

''என்ன ஸார்?'' எம்.டி.யின் நாக்கு உலர்ந்து போய் இருந்தது. காய்ந்த உதடுகளை அவர் ஒரு முறை நாவால் வருடி விட்டுக் கொண்டார்.

''நான்கு நாளுக்கு முன் அங்கே ஒரு ஐம்பது வயது ஆசாமி இறந்து போயிருக்கிறார். டாக்டர் ஹார்ட் அட்டாக் என்று சொல்லியிருக்கிறார். அவர் மனைவி அப்போது நம்பினாள். இப்போது கம்ப்ளெயின்ட் பண்ணியிருக் கிறாள்.''

''என்னவென்று?''

''அவள் கணவனும் சாவதற்கு முன் வரை உங்கள் கம்பெனியின் வைட்டமின் காப்ஸ்யூல்களைச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாராம். அதனால் அவர் உபயோகப் படுத்திய அந்த பாட்டிலில் இருக்கும் காப்ஸ்யூல்களிலும் ஒரு வேளை அந்த விஷம் இருக்கிறதோ என்னவோ என்று ஆராய வேண்டும் என்று சொல்லியிருக்கிறாள். விஷ யத்தை நீங்கள் அடக்கி வைக்க முடியவே முடியாது. அந்தப் பெண் ஏற்கனவே செய்தித் தாள்களுக்கெல்லாம் போன் பண்ணி தன் சந்தேகத்தை தெரிவித்திருக்கிறாளாம்.''



பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸின் எம்.டி. நாற்காலியில் மயங்கிச் சரிந்தார்.

# 4

சாந்தோம். கடற்கரையை ஒட்டியிருந்த அந்தப் பிர தேசத்தில் காற்றில் குளிர் கலந்திருந்தது. உப்பும் ஓசோனும் கலந்த குளிர்காற்று சாந்தோம் குடியிருப்பு களில் குழந்தைகளை ஸ்வெட்டர் போட வைக்கத் தொடங்கி இருந்தது. இளம் மாலை. சில கன்னிமை கழியாத நிலங்கள். நேற்று முளைக்க ஆரம்பித்த கட்டிடங்கள், இவற்றுக்கு நடுவே அந்த நாற்பதடி சாலை, சாலையின் முடிவில் அந்த போலீஸ் ஜீப் நின்றிருந்தது.

கறுப்பு வர்ணம் பூசிய கேட்டில் 'கதவைச் சாத்தி விட்டு வரவும்' என்று கேட்டுக் கொண்டது. போர்டு. ஒரே ஒரு மாடியுடன் சின்ன மாளிகை. மாடியில் பால்கனி. காற்றை வாரிக் கொண்ட அந்த பால்கனியில் இரு பிரம்பு நாற் காலிகளில் அவர்கள் உட்கார்ந்திருந்தார்கள். இன்ஸ் பெக்டர் துரை அரசன், சசிதரன்.

சசிதரன் செஸ்போர்டை உன்னிப்பாகக் கவனித்தான். மூக்கை வினோதமாக உறிஞ்சினான்.

''இந்த கேம் முடியப் போவதில்லை. இன்ஸ்பெக்டர்'' என்றான்.

துரை அரசன் கையில் இருந்த லத்தியின் பித்தளைப் பூண்பாகத்தில் சசிதரனின் நெற்றியில் வந்து விழுந்த முடியை ஒதுக்கி விட்டார். சசிதரனுக்கு அந்த சுருள் முடி

ஒரு போனஸ் அழகு. சிரிக்கும்போது சற்றே தெரியும் வெண் பற்களில் குழந்தை. கண்களை மூடி தியானத்தில் ஈடுபடும்போது, போட்டோக்களில் பார்க்கும் ரிஷி. ஒழுங் கற்ற மீசையில் மெலிதான ரவுடி. சட்டைப் பித்தான்களை சரியாகப் போடாமல் இருப்பதில் மறதி புரொபசர்.

''ஏன் சசி, இந்த கேம் முடியாது?'' துரை அரசன் தன் குதிரையை நகர்த்தி விட்டுக் கேட்டார்.

''உங்களுக்கு டிபார்ட்மெண்ட்டில் இருந்து அழைப்பு வரப் போகிறது'' சசிதரன் சிரித்தான்.

கீழே கேட்டைத் திறந்து ஜீப் டிரைவர் ''அய்யா'' என்றான்.

துரை அரசன் எழுந்தார். மேஜையில் வைத்திருந்த தொப்பியை எடுத்துப் பொருத்திக் கொண்டார்.

''எப்படித்தான் இவ்வளவு கரெக்டாகச் சொல்லு கிறாயோ?'' என்று கீழிறங்கினார்.

ஜீப்பில் வயர்லெஸ் கரகரத்துக் கொண்டிருந்தது. ரிசீவரை எடுத்துக் கேட்டார். கமிஷனர் குரல் கேட்டதும் இன்ஸ்பெக்டர் துரையரசன் விறைத்தார்.

''யெஸ் சார்.''

''வைட்டமின் காப்ஸ்யூல் கேஸ் விஷயம் உங்களுக்குத் தெரியுமில்லையா?''

''யெஸ் சார்.''

''அதில் ஒரு திருப்பம்.''

''யெஸ் சார்.''

''மேற்கு அண்ணா நகரில் இன்னொரு டெத் ரிப் போர்ட் ஆகியிருக்கிறது.''



''யெஸ் சார்.''

''ஸ்டேஷனில் இருந்து கால் வந்தது. நான்தான் ரிசீவ் பண்ணினேன். அந்தக் கேஸை நான் உங்களிடம் ஒப்படைக்கிறேன். இந்தக் கேஸை நீங்கள்தான் சால்வ் செய்ய வேண்டும்.''

''யெஸ் சார்! நான் வெஸ்ட் அண்ணாநகர் ஸ்டே ஷனைக் கான்டாக்ட் பண்ணிக் கொள்கிறேன் சார்.''

''ஆல் தி பெஸ்ட்.''

''தாங்க் யூ சார். ஓவர்.''

''ஓவர்.''

இன்ஸ்பெக்டர் துரையரசன் ரிசீவரை அதன் இடத்தில் பொருத்தினார்.

''வெஸ்ட் அண்ணாநகர் ஸ்டேஷன் போப்பா'' என்றார் டிரைவரிடம்.

டிரைவர் ஜீப்பைக் கிளப்பினார். இருள் தழுவ ஆரம் பித்த பின்னும், சிறுவர்கள் சுள்ளிக்கட்டை ஸ்டம்பு களுடன் கிரிக்கெட் ஆடினார்கள்.

போலீஸ் சட்டங்கள் என்னை ஒண்ணும் செய்ய முடியாது என்ற மமதையுடன் எருமை ஒன்று அலட்சியம் செய்து பாதை விட்டு விலகாமல் நின்றது. ஜீப் ஹாரன் விரயமானது. டிரைவர் ஜீப்பை லேசாக எருமையின் பின்புறம் இடித்து அதை நகர்த்தி, மேற்கு அண்ணா நகர் ஸ்டேஷன் நோக்கி ஜீப்பைச் செலுத்தினார்.

இன்ஸ்பெக்டர் துரையரசன், கைத்தடியை நிமிடத் திற்கொரு தரம் காற்றில் சுழற்றி இடது உள்ளங்கையில் தட்டிக் கொண்டார். பாக்கெட்டில் இருந்து பொடிசாக ஒரு சீப்பு எடுத்து மீசையை வாரிவிட்டுக் கொண்டார்.

மேற்கு அண்ணா நகர், போலீஸ் ஸ்டேஷன். இன்ஸ்பெக்டர் ஜீப்பில் இருந்து கீழே இறங்கினார். அந்த ஏரியாவை சர்வே செய்ய வந்தவர் போலத் தன்னைச் சுற்றிலும் ஒரு முறை பார்த்தார்.

துரை அரசன் நல்ல உயரம். எடுத்த கேஸை முடிப்பதில் ஒரு குழந்தை ஆர்வம் உண்டு. போலீஸ் பயிற்சியில் ஏகப்பட்ட கோப்பைகள் வாங்கி இருக்கிறார். ஆனாலும், கர்வம் கிடையாது. எலும்புக்குப் பதிலாக இரும்பை வைத்துக் கையில் தைத்துக் கொண்டிருக்கிறார் என்று அடிபட்டவர்கள் சந்தேகம் சொல்லலாம். ஆனால், நட்புக்காக தக்காளிப் பழத்தை விட மென்மையாகி விடுவார். அவர் மீசைக்காகவே ஒருவேளை கூடுதலாகச் சாப்பிடுகிறாரோ என்ற சந்தேகம் பார்ப்பவர்க்கு எழும். ஆனால், குழந்தைகளையும் குறிப்பாக சசிதரனையும் பார்க்கும்போது அந்த மீசைக்குப் பின்னால் புன்னகை பரந்து விரியும்.

போலீஸ் ஸ்டேஷன் வாசலில் கட்டப்பட்டிருந்த ஒரு பசுவின் மடியை அதன் கன்று உதைத்து உதைத்துப் பால் குடித்துக் கொண்டிருந்ததைப் பார்த்தபோது துரையரசனுக்கு இப்போது அந்த மீசைக்குப் பின் சிரிப்பு வெளிப்பட்டது.

ஸ்டேஷனுக்குள் நுழைந்தார்.

''ஹலோ இன்ஸ்பெக்டர்'' என்று ஒரு குரல் அவரை வரவேற்றது. தேவசகாயம். அந்த ஸ்டேஷன் கிரைம் இன்ஸ்பெக்டர்.

துரையரசன் கை கொடுத்தார். காட்டிய நாற்காலியில் உட்கார்ந்தார். துரையரசன் அமர்ந்ததும் அவருக்கு எதிரே ஒரு சின்ன ப்ளேட்டில் வறுத்த வேர்க்கடலையும், பக்கத்தில் டம்ளரில் சூடான மசாலா டீயும் ஆஜராயின.



''நீங்கள் வருகிறீர்கள் என்று தெரியும்'' என்றார் இன்ஸ்பெக்டர் தேவசகாயம்.

''தாங்க் யூ'' என்று வேர்க்கடலையைச் சாப்பிடத் தொடங்கினார். ''அந்த காப்ஸ்யூல் கேஸ் எனக்கு ஓரளவு தெரியும். இன்றைக்குப் புதிதாய் யாரோ ஒரு பெண் இன்னொரு டெத்தை ரிப்போர்ட் பண்ணியிருப்பதாக...''

''புவனநாயகி.''

''பழசாகியிருக்கிறது பெயர்.''

''பெயர்தான் பழசு. ஆள் பழமை விரும்பி இல்லை.''

''அப்படி என்றால்?''

''கேஸ்தான் உங்கள் கஸ்டடியில் வந்தாயிற்றே இன்ஸ்பெக்டர் பார்ட்டியை நீங்களே நேரில் போய்ப் பார்த்து விடுங்களேன்.''

''ஓ.கே. அட்ரஸ் ப்ளீஸ்.''

ஏ ப்ளாக்கில் ஆறாவது அவின்யூவில் முப்பத்தாறாம் நம்பர் வீட்டைக் கண்டு பிடிப்பதற்குள், ஜீப்பில் ஒரு லிட்டர் டீசலாவது செலவாகியிருக்கும் என்று தோன்றியது.

ஒரு மாதிரி ஒதுக்குப் புறத்தில் இருந்தது அந்த வீடு. இல்லை பங்களா, இல்லை வீடு.

அந்த கட்டிடத்தை வீடு என்று சொல்வதா இல்லை பங்களா என்று சொல்வதா என்பதில் லேசான குழப்பம் எழுந்தது துரை அரசனுக்கு.

தோட்டம் இருந்தது. மூன்று கிரவுண்ட் பரப்பளவு இருக்கலாம் போல் இடம். ஆனால், தோட்டத்தில் நவீன பசுமைகளான மணி ப்ளான்ட், பொகன் வில்லா, போன்சாய், என்றெல்லாம் இல்லை. சுண்டைக்காய்ச் செடி

காடாக வளர்ந்திருந்தது. மாமரம், கொய்யா மரம், வாழை மரம், கனகாம்பரம், அரை நெல்லிக்காய், மகிழ மரம், நாகமல்லி, கீழா நெல்லி, குப்பை மேனி எல்லாம் சித்த வைத்தியர் ஒருவரால் வளர்க்கப்படுகிறது என்று சொன்னால் நம்பலாம் போல இருந்தது.

தோட்டத்தின் நடுவே வீடு. பெரியது தான். ஆனால், மார்பிள் இல்லை. மொசைக் இல்லை. வாசல் முகப்பில் கடப்பைக் கல் போடப்பட்டு அது உடைந்திருந்தது. பச்சை பெயிண்ட் கதவு. பச்சை பெயிண்ட் இரும்புக் கம்பிகள். மேலே கூம்பு வைத்து முடிந்திருந்த 1954 என்று சிமெண்டில் எழுதப் பெற்றிருந்த முப்பத்தெட்டு வருட பாரம்பரியம் கொண்ட வீடு.

வீட்டின் விலாப் பகுதியில் ஒரு பியட் நின்றிருந்தது. அதுவும் 1954 ஓ என்னவோ என்று துரையரசன் நினைத்துக் கொண்டார்.

திடீரென்று நினைவு வந்தவர் போல பொடி சீப்பை எடுத்து மீசையை ஒரு முறை வாரி விட்டுக் கொண்டார்.

காலிங் பெல்லைக் கட்டை விரலால் அழுத்தினார்.

அவர் அழுத்துவதற்காகவே காத்திருந்த மாதிரி கதவு திறந்தது.

அந்தப் பெண் கண்களில் கேள்விக் குறியுடன், நெற்றியில் வெறுமையுடன், முகத்தில் சோகத்துடன், உதட்டில் ஒரு வரவேற்புப் புன்னகையுடன் ''என்ன வேண்டும்?'' என்று கேட்டாள்.

''மிஸஸ் புவனநாயகி?''

''நான்தான்'' என்றாள்.

''உள்ளே வாருங்கள்.''



போனார். ரிசப்ஷன் ஹால் பெரிதாக இருந்தது. கருப்பாகக் கடப்பைக் கல் போடப்பட்டு சுவருக்கு. க்ரீம் நிறத்தில் பெயிண்ட் அடிக்கப்பட்டிருந்தது. சோபா செட்கள் க்ரீம் நிற உறைகளுடன் பளிச் என்று இருந்தன.

வரவேற்பறையை வடிவமைத்தவர்களுக்கு நிச்சயம் ஒரு ரசனை இருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த அளவுக்கு அதை அவ்வளவு பிரகாசமாக வைத்திருக்க முடியாது.

துரையரசன் சோபாவில் அமர்ந்தார்.

''சொல்லுங்கள்'' என்றார்.

''ஒரு நிமிஷம்'' என்று உள்ளே சென்றாள் புவன நாயகி.

திரும்பி வரும்போது அவள் கையில் ட்ரேயில் இரு காபி கோப்பைகள்.

''குடியுங்கள்'' என்றாள். தான் ஒன்று எடுத்துக் கொண்டாள்.

துரையரசன் ஒருமுறை ருசி பார்த்தார். காபி நன்றாக இருந்தது. அப்போதுதான் இறக்கிய டிகாக்ஷனில் போட்ட மாதிரி ஒரு ருசி.

''மிஸஸ் புவனநாயகி. நீங்கள் வெஸ்ட் அண்ணா நகர் போலீஸ் ஸ்டேஷனில் ரிப்போர்ட் பண்ணியிருக்கிறீர்கள். ரைட்?''

''ஆம் சார்'' என்றபோதே அவள் குரல் தழுதழுத்தது.

''நீங்கள் விரிவாகச் சொல்லுங்கள். நடந்தது என்ன என்று?''

''வித் யுவர் பர்மிஷன்'' என்று அவள் டீப்பாயில் இருந்த ஒரு டவலால் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

''என்ன ஆயிற்று என்றால்...'' என்று குரலைத் திடப் படுத்திக் கொண்டு பேசத் தொடங்கினாள்.

புவனநாயகி என்ற பெயர் பழையதுதான். அந்தப் பெயர் அவளுக்குக் கொஞ்சம் கூடப் பொருந்தவில்லை. அவ்வளவு நவீனமாக இருந்தாள். அவள் புருவம் சீராக வில் போல் வளைத்து ட்ரிம் செய்யப்பட்டிருந்தது. கொஞ்சம் அகல நெற்றி. மெல்லிய உதடுகள். அவற்றில் ஸ்கின் டோன் லிப்ஸ்டிக்கைத் தடவியிருந்தாள். அது பளபளவென்று க்ளாஸியாகத் தெரிந்தது. அறையின் குழல் விளக்கு வெளிச்சத்தைப் பிரதிபலித்துக் கொண் டிருந்தது. மூக்கு சீராக, நேராக இருந்தது. மோவாய் உள்ளங்கை நான்கு விரல்களால் தாங்கிப் பார்க்க வேண்டும் என்ற நினைப்பை எழுப்பியது.

அவளுக்கு மிஞ்சி மிஞ்சிப் போனால் இருபத் தைந்து வயதிருக்கலாம். அந்த வயதுக்கு அவள் தன் உடலை வெகு கவனமாகப் பேணியிருந்தாள் என்பது அவளது நெஞ்சின் விரிவிலும் இடையின் குறுகலிலும், அதன் கீழ்ப் பிரதேச விரிவிலும் மிக நன்றாகப் புலப் பட்டது.

அவள் முகம் துக்கமாகத் தென்பட்டது. ஒரு வேளை அவள் முகத்தில் அவள் போட்டுக் கொண்டிருந்த ஆயில் மேக்கப்பினாலும், நெற்றியில் பொட்டில்லாததாலும் கூட இருக்கலாம்.



''நான் சொன்னதை நீங்கள் கவனித்த மாதிரியே இல்லையே'' என்ற அவளது திடீர் உச்சஸ்தாயி குரல் துரையரசனை கொஞ்சம் வெட்கப்படச் செய்தது.

''ஸாரி மிஸஸ் புவனநாயகி. இந்த இளம் வயதில் உங்களுக்கு நேர்ந்த துன்பத்தை நினைத்துக் கொண் டிருந்து விட்டேன்.''

''பரவாயில்லை. என்னை புவனா என்று கூப்பிடுங்கள். மிஸஸ் புவனநாயகி என்றெல்லாம் சொன்னால் ரொம் பவும் அஃபிஷியலாகத் தோன்றுகிறது. நீங்கள் அந்நிய மாகிப் போய் எனக்கு உதவக்கூட மாட்டீர்களோ என்று தோன்ற ஆரம்பித்து விடும்.''

''ஓ.கே. போலீஸ்காரர்களும் மனிதர்கள் தானே. நீங்கள் சொல்லுங்கள் புவனா. நான் என்னால் ஆனதைச் செய்கிறேன்.''

''என் கணவர் பெயர் சத்ரபதி. யுனிவர்சிடியில் பாடனி புரொபசர். அவருக்கு ஐம்பத்தி மூன்று வயது. 52 வயது வரை திருமணம் செய்து கொள்ளாதவர். மனைவி குழந்தை எல்லாம் இருந்தால் அவரால் தன் வேலையை நிம்மதியாகச் செய்ய முடியாது என்ற காரணத்தால் திருமணமே செய்து கொள்ளவில்லை என்று கூறுவார். அவருக்கு ஐம்பத்தோரு வயது ஆனபோது நான் யுனிவர் சிடியில் எம்.எஸ்ஸி பாடனி பண்ணினேன். எனக்கு வகுப்பெடுத்தார். கோர்ஸ் முடிந்ததும் என்னை அவருடைய பர்சனல் அஸிஸ்டென்டாக இருக்க விருப்பமா என்று கேட்டார். நான் அனாதை. அப்பா அம்மா இல்லாதவள். அன்னை தெரசா அனாதை விடுதியில்தான் இருந்தேன்.

அந்த விடுதி வேலைகளைச் செய்து கொண்டிருந்தேன். எப்படியும் நான் விடுதியை விட்டு வெளியே போக வேண்டும். எனக்கும், கல்யாணம், கணவர் என்று வாழ வேண்டும் என்ற ஆசையெல்லாம் இருந்தது. சத்ரபதி யுடன் பழகப் பழக அவருடைய பர்சனாலிட்டி என்னைக் கவர்ந்து விட்டது. நான் அவருடைய பி.ஏ.வாக இருக்கச் சம்மதித்தேன். வேலைக்குச் சேர்ந்த பின் அவருடைய சின்யாரிட்டி என்னை மேலும் கவர்ந்தது. அவர் மென்மை யானவர். ஒரு மரத்தின் ஒரு பழுத்த இலையைக் கிள்ளு வதைக் கூட தாங்காதவர்.. பூ வாடி உதிர்ந்தால் கவலைப்படுபவர். அவ்வளவு மென்மையானவர் என்பதா லேயே எனக்கு அவர் மீது காதல் பிறந்தது. காதலித்தேன். என் காதலைத் தெரிவித்தேன். கல்யாணத்திற்கு ஒத்துக் கொண்டார். கல்யாணமாகி ஒரு வருடம்தான் இருக்கும். அதற்குள்... அதற்குள்... அதற்குள்...''

அவள் அழுது ஓயட்டும் என்று துரையரசன் சற்று நேரம் மௌனமாக இருந்தார். தர்ம சங்கடமாக உணர்ந் தார். அவருடைய தொழிலில் இந்த மாதிரியான தர்ம சங் கடங்கள் சகஜம். அந்தத் தருணங்களில் அவர் மௌனம் சகஜம்.

"போன மாதம் வைரஸ் பீவர் என்று டாக்டர் சொன்னார். மருந்து கொடுத்தார். உடலில் பழையபடி சக்தி வருவ தற்கு, வைட்டமின் காப்ஸ்யூல் எழுதிக் கொடுத்தார். நான் அவருடைய உடல்நிலை சரியாகி விடும் என்ற நம்பிக்கையுடன் மருந்தையும், வைட்டமின் காப்ஸ் யூலையும் கொடுத்தேன். ஆனால்... ஆனால்...''



''அவர் எப்போது இறந்து போனார்?''

''நேற்று திங்கள். அதற்கு முந்தைய திங்கள். இன்றைக்கு ஒன்பது நாள் ஆகிறது. டாக்டர் வந்து பார்த்து ஹார்ட் அட்டாக் என்று சொல்லி விட்டார். அவருடைய இதயம் மிகவும் ஸ்ட்ராங்கான இதயம். தியானப் பயிற்சி, பிராணாயாமம் எல்லாம் பண்ணுவதால் அவருடைய பல்ஸ்ரேட் மாறியதே இல்லை. பீ.பீ. எப்போதும் ஒரே சீர். எல்லாம் நார்மல். ஷுகர் கிடையாது. கொலஸ்ட்ரால் கிடையாது. அப்படிப்பட்டவருக்கு ஹார்ட் அட்டாக் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. டாக்டர் சொல்லிவிட்டார். அவரும் போய்விட்டார். எனக்கு வேறு என்னதான் வழி இருக்கிறது. அதனால் என் விதியை நொந்து கொண்டு சும்மா இருந்து விட்டேன். ஆனால், நேற்று சாயங்காலம் பேப்பரில் மருந்துக் கம்பெனியின் மோசடி என்ற ஒரு நியூஸ் போட்டிருந்தார்கள். பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸ் தயாரிக்கும் வைட்டமின் காப்ஸ் யூல்ஸில் ஆர்சனிக் விஷம் இருந்த காரணத்தால் ஒரு இளம் பெண் இறந்து போனாள் என்று நியூஸில் ரிப்போர்ட் ஆகியிருந்தது. அந்த நியூஸ் பார்த்துவிட்டு, என்னிடம் மிச்சமிருக்கும் வைட்டமின் காப்ஸ்யூல் பாட் டிலை எடுத்துப் பார்த்தேன். பெஸ்ட் பார்மாசூட்டிகல் கம்பெனி தயாரிப்புதான் அது. திகைத்தேன். ஆத்திரப் பட்டேன். உடனே போலீசில் ரிப்போர்ட் செய்யலாம் என்று நினைத்தேன். அதனால் போன உயிர் திரும்பி வந்துவிடப் போகிறதா என்று பெரிய தத்துவ ஞானி போல் நினைத்துக் கொண்டு நேற்று சும்மாயிருந்து விட்டேன்.

ஆனால் யோசித்துப் பார்த்ததில் என் கோபம் அதிக மாகி விட்டது. அந்த மருந்தால்தான் சத்ரபதி இறந்து போயிருந்தால்? ஒரு இளம் பெண் இறந்தது அதனால் தான் என்று தெரிந்து விட்டது. சத்ரபதி இறந்ததும் அத னால்தான் என்று தெரிந்தால் எப்படி சும்மா இருப்பது?''

....அனாதையாக இருந்த நான், இனிமேல் அனாதை இல்லை என்று நினைத்த நேரத்தில் மறுபடி இந்த மாதிரி அனாதையாகி விட்டேனே. என்னை அனாதையாக்கியது பெஸ்ட் பார்மாசூட்டிகலாக இருந்தால், அந்தக் கம் பெனிக்கு ஒரு பாடம் கற்பிக்க வேண்டும்.''

''என்ன பாடம்?''

''நஷ்ட ஈடு கேட்கிறேன் சார். என் கணவர் இருந் திருந்தால் நான் அவருடன் எவ்வளவு சந்தோஷமாக இருந்திருப்பேன். எனக்கு வாழ்க்கையின் சந்தோஷமே இப்போதுதான் ஆரம்பித்தது. அதற்குள் அந்த சந் தோஷத்தை எனக்கில்லை என்று ஒரு வைட்டமின் காப்ஸ்யூலால் மறுத்துவிட்ட அந்த மருந்துக் கம்பெனி எப்படி இனிமேலும் தொடர்ந்து சீராக இயங்கலாம்? இன்னும் எத்தனை பேர் வாழ்க்கையின் சந்தோஷத்தை அந்தக் கம்பெனி சீரழிக்கப் போகிறது? விடலாமா? அவ்வளவு லேசாக விட்டு விடலாமா? இந்தியாவில் எல்லோரும் வாயில்லாப் பூச்சிகள் என்ற தைரியத்தில் தானே இவர்கள் இப்படியெல்லாம் ஆட்டம் போடுகிறார் கள். அதனால் நான் மருந்துக் கம்பெனி மீது வழக்கு தொடுக்க வேண்டும். அப்படி என்றால் என் கணவர் இறந்தது அந்த மருந்தால் தானா என்று எனக்குத் தெரிய வேண்டும்.''



''சரி புவனா. அந்த காப்ஸ்யூல் புட்டி இருக்கிறதா?''

''இருக்கிறது. நான் போலீசில் ரிப்போர்ட் பண்ணுவது தெரிந்தால் காப்ஸ்யூல் பாட்டிலை என்னிடம் இருந்து பறிக்க முயன்றாலும் முயல்வார்கள் என்று நான் அந்தப் பாட்டிலை நேற்றே பாங்க் லாக்கரில் வைத்து விட்டேன். உங்களை மாதிரி கவர்ன்மென்ட் ஆபீஸரிடம்தான் ஒப் படைக்க வேண்டும் என்று நினைத்திருந்தேன். நாளைக் காலை அந்த பாட்டிலை எடுத்துத் தருகிறேன்.''

''இன்னொரு தர்ம சங்கடமான கேள்வி.''

''என்ன இன்ஸ்பெக்டர்?''

''உங்கள் கணவரின் உடல் போஸ்ட் மார்ட்டம் செய்யப்பட்டதா?''

''இல்லை.''

''அவர் ஹிந்துவா. இல்லை வேறு எந்த மதத்தை யாவது சேர்ந்தவரா?''

''அது எதற்கு இப்போது?''

''இல்லை. உடலை எரித்து விட்டீர்களா, புதைத்து விட்டீர்களா என்று தெரிந்து கொள்ளத்தான் கேட் கிறேன்.''

''அவர் மத வழக்கப்படி உடலை எரித்திருகக வேண் டியதுதான். ஆனால், எரிக்கவில்லை. புதைக்கச் செய்தேன். காரணம் அது அவருடைய கடைசி வேண்டுகோள். இறக்கும் நேரத்திற்குக் கொஞ்சம் முன்பு அவர் எழுதியே காட்டினார். அவரை இதே தோட்டத்தில், அவர் வளர்க்கும் செடி கொடிகளுக்கு நடுவே புதைக்க வேண்டும் என்று

எழுதிக் காட்டினார். அதனால் அவரைப் புதைத்து விட்டோம்.''

''அப்படியானால் உடலை உங்கள் தோட்டத்திலேயே புதைத்திருக்கிறீர்களா?''

''ஆமாம் இன்ஸ்பெக்டர். கார்ப்பரேஷன், பர்மிஷன் வாங்கித்தான் புதைத்தேன். அவர் எழுதிய லெட்டர் கூட கார்ப்பரேஷன்காரர்களிடம் கொடுத்தேன்.''

''ஐ.ஸீ! அந்த உடலை நான் எடுத்து போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்பினால் உங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லையே?''

''நாட்-அட்-ஆல்.''

இன்ஸ்பெக்டர் துரையரசன் எழுந்து கொண்டார். அந்த அறையின் மூலையில் இருந்த போனை நெருங்கினார். டயலைச் சுற்றி எதிர் முனை பதில் வந்ததும் பேசினார். பேசி முடித்துவிட்டு அவளருகில் வந்தார்.

''புவனா. நான் டிபார்ட்மென்ட் ஆசாமிகளுக்குச் சொல்லியிருக்கிறேன். ஆம்புலன்ஸ் வந்துவிடும். எதற்கும் அந்த உடலை போஸ்ட் மார்ட்டம் செய்து பார்த்து விடலாம். ஓ.கே?''

''ஓ.கே. இன்ஸ்பெக்டர்.''

''இப்போது தோட்டத்திற்குப் போய். உங்கள் கணவர் புதைக்கப்பட்டிருக்கும் இடத்தைப் பார்க்கலாமா?''

அவள் எழுந்து கொண்டாள். அவருக்கு முன்னால் நடந்தாள்.



''வாருங்கள் இன்ஸ்பெக்டர்'' என்றாள்.

அவள் முன்னால் நடந்தது இன்ஸ்பெக்டர் துரையரசனின் மனதை ஒரு மாதிரி சஞ்சலப்படுத்தியது. அவளுடைய இடுப்பசைவு. இடுப்பில் இருந்த வசீகரமான அந்த மடிப்பு. என்ன இருந்தாலும் ஒரு மனிதனுக்கு இருக்கும் சராசரி புத்திதானே தனக்கும் இருக்கிறது என்று தன்னைத் தானே நொந்து கொண்டார். அவள் இளம் விதவை. கணவனை இழந்தவள். காயப்பட்டிருப்பவள். அவளை இப்படிப் பார்ப்பதே தப்பு.

தோட்டத்தின் கதவு திறந்ததும், சிலீர் என்று குளிர் காற்று அவர் முகத்தில் வீசியது. கொடைக்கானல், ஊட்டி போன்ற மலைப் பிரதேசங்களில் அடிக்கும் மூலிகைக் காற்றின் மணம்போல அந்தக் காற்றின் மணமும் இருந்தது.

அவர் பார்வையில் தோட்டத்தின் விலாப் பகுதியில் வரிசையாய் நின்ற யூகலிப்டஸ் மரங்கள் தெரிகின்றன. மூலிகைக் காற்றுக்கான காரணம் புரிந்தது.

ஒரு சின்ன நடைபாதை. அதில் அவள் முன்னால் நடக்க, துரையரசன் பின்னால் நடந்தார்.

நடைபாதையின் இடது பக்கம் திடீரென்று ஏதோ சளசளக்கும் சத்தம் கேட்டது. துரையரசன் திடுக்கிட்டுப் போனார்.

''என்ன அது?''

''புரொபசருக்கு மீன் வளர்ப்பதில் பிரியம் அதிகம். அதனால் தோட்டத்தில் ஒரு சிமெண்ட் தொட்டி கட்டி

அதில் மீன் வளர்க்கிறார். அந்த மீன்கள் துள்ளிக் குதிக்கும் சத்தம்.''

''வலை போட்டு மூடியிருக்கிறது?''

''ஆமாம். இல்லாவிட்டால் மீன் கொத்தி, காக்காய் எல்லாம் மீனைக் கொத்திக் கொண்டு போய்விடும்.''

அவள் திரும்பிக்கூடப் பார்க்காமல் நடந்து தோட்டத்தின் வடமேற்கு மூலையை அடைந்தாள்.

''இதுதான் சார் புரொபசர் கல்லறை'' என்றாள்.

வானில் சோகை நிலவு வெள்ளிப் பாளங்களை தோட்டத்தில் அங்கங்கே வாரி இறைத்திருந்தது.

புரொபசர் சத்ரபதி புதைக்கப்பட்ட இடம் மேடாக இருந்தது. இன்னும் செங்கல் வைத்துக் கட்டப்படவில்லை. பளிங்கால் அலங்கரிக்கப்படவில்லை. வெறும் தோட்ட மண் மூடியிருந்தது. அங்கே புற்கள் முளைத்திருந்தன. வேறு ஏதோ பெயர் தெரியாத ஒரு தாவர வகை முளைத்திருந்தது.

இன்ஸ்பெக்டர் துரையரசன் குனிந்தார்.

குனிந்தபோது புவனநாயகியின் 'வீல்' என்ற அதிர்ச்சி சத்தத்தைக் கேட்டார். அவ்வளவு அழகிய புவனநாயகியிடமிருந்து இவ்வளவு அவலமாய் ஒரு அலறலா என்று அவர் நினைப்பதற்குள் அவர் பின் மண்டையில் ஏதோ ஒன்று மோதியது.

அவர் மயங்கிக் கீழே விழுந்தார்.



# 5

இன்ஸ்பெக்டர் துரையரசன் முகத்தில் சில்லென்ற உணர்வு தெறிக்க, சட்டென்று சுயநினைவை அடைந்தார். கண் விழித்தார். எழுந்து கொண்டார்.. அவரைச் சுற்றி நான்கு பேர். ஆம்புலன்ஸ் ஆசாமிகள். உடலைத் தோண்டி எடுக்க வந்திருந்த இருவர்.

''என்ன சார் நடந்தது?''

''அந்தப் பெண் எங்கே?'' என்று கேட்டார் துரையரசன்.

''அந்தம்மா அங்கே மயங்கி விழுந்திருக்கிறார்கள்'' என்று சுட்டிக் காட்டினான் ஒருவன்.

அவன் சுட்டு விரல் நீண்ட திசையில், தோட்டத்து மண்ணில் புவனா மல்லாந்து விழுந்திருந்தாள்.

''யாரோ என்னை அடித்துப் போட்டார்கள். அவளை எழுப்புங்கள்.''

''நாங்கள் இந்த அட்ரஸ் தேடிக் கண்டு பிடித்து வருவதற்குக் கொஞ்சம் நேரமாகி விட்டது. கதவு திறந்திருந்தது. நாங்கள் நேரே உள்ளே வந்தால் தோட்டத்துக் கதவும் திறந்தே இருந்தது. இங்கே வந்தால் ஏற்கனவே இரண்டு ஆட்கள் தோட்டத்தில் அந்த மூலையைத் தோண்டிக் கொண்டிருந்தார்கள். நாங்கள் வந்த சத்தம் கேட்டு நிமிர்ந்து பார்த்தார்கள். 'ஏய்... யார் அது?' என்று நாங்கள் கேள்வி கேட்டு முடிப்பதற்குள் அவர்கள் காம்பவுண்ட் சுவர் ஏறிக் குதித்து ஓடினார்கள்.

இருட்டில் ஒரு ஆட்டோ கிளம்பும் சத்தம் கேட்டது. முதலில் நாங்கள், அந்த ஆட்கள் நீங்கள் தோண்டச் சொன்ன ஆட்கள் என்று நினைத்து விட்டோம். அப்புறம் நீங்கள் ஒரு பக்கம், மேடம் ஒரு பக்கம் விழுந்திருப்பதைப் பார்த்த பின்னால் தான் விஷயம் வேறு ஏதோ என்று தெரிந்தது.''

இன்ஸ்பெக்டர் துரையரசன் தோண்டப்பட்ட இடத்தைப் பார்த்தார். தரை மட்டத்திலிருந்து ஒரு அடி வரைக்கும் தான் தோண்டப் பட்டிருந்தது.

இந்தப் பிணம் போஸ்ட் மார்ட்டத்திற்குப் போகக் கூடாது என்பதில் யாருக்கோ ஆர்வம் இருக்கிறது. யாராக இருக்க முடியும்?

பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸ் காரர்களுக்கா?

மார்க்கெட்டில் அவர்கள் கம்பெனி பெயர் கெடக்கூடாது என்று அவர்கள்தான் நினைக்கக் கூடும். கம்பெனி அழிந்து விட்டால் என்ன செய்வது என்று இந்த மாதிரி கீழ்த்தரமான வேலைகளில் எல்லாம் இறங்கி விட்டார் களா என்ன?

கீழே விழுந்து கிடந்த புவனநாயகியைப் பார்த்தார். பரிதாபமாக இருந்தது. ஒரு பெண் எந்த விதப் பின்னணி யும் இல்லாத, ஆதரவுக்கு ஏங்குகிற ஒரு பெண் அவ ளுக்குப் போய் இவ்வளவு அநீதியா?

அவருக்குக் கோபம் மண்டையைச் சூடேற்றியது. எப்படியாவது அந்த மருந்துக் கம்பெனியின் ஊழலை வெளிப்படுத்துவது என்று தீர்மானித்தார்.



புவனா எழுந்தவுடன் திகைத்துப் போய், துரையர சனைப் பார்த்தாள். அழத் தொடங்கினாள்.

''திடீரென்று உங்கள் பின்னால் ஒருவன் மண் வெட்டிக் கம்பை உயர்த்தி அடிக்க வருவதைப் பார்த்தேன் சார். நான் உங்களை எச்சரிப்பதற்குள் நானே அடிபட்டு விட்டேன். நான் சொல்லவில்லை? மருந்துக் கடைக் காரர்களின் வேலைதான் சார் இது. நான் காப்ஸ்யூல்களை லாக்கரில் வைத்தது ஏன் என்று இப்போது புரிந்திருக் குமே.''

''புவனா கொஞ்சம் அமைதியாய் இருங்கள். கண்டு பிடிக்கலாம். எல்லாவற்றையும் கண்டு பிடிக்கலாம். மருந்துக் கம்பெனிதான் மோசடி செய்திருக்கிறது என்றால் நீங்கள் கேஸ் போட நான் ஹெல்ப் பண்ணுகிறேன். உங்களுடைய சந்தோஷமான வாழ்க்கைக்கு இனிமேல் பணம் ஒன்றுதான் ஆதாரம். அது எப்படி வருகிறதென் றாலும் அதை உங்களுக்கு வாங்கித்தர நான் உதவுகிறேன்'' என்றார் துரையரசன்.

அவர்கள் அந்த இடத்தைத் தோண்டினார்கள். புரொ பசரின் உடல் ஒரு சவப் பெட்டியில் போட்டு மூடப் பட்டிருந்தது. புவனாவிற்கு எதிரே சவப்பெட்டி மூடியைத் திறக்க, துரையரசனுக்குக் கொஞ்சம் யோசனையாக இருந்தது. பிணம் அழுகத் தொடங்கியிருக்கும். நாற்றம் அடிக்கும். முகம் கூட சிதைந்து போயிருக்கலாம். உடம்பி லேயே உருவான புழுக்கள் அவர் உடலைத் தின்னத் தொடங்கியிருக்கலாம்.

''போஸ்ட் மார்ட்டத்திற்கு அனுப்புங்கள்'' என்றார் துரையரசன்.

ஆம்புலன்ஸில் சவப்பெட்டி ஏற்றப்பட்டு, ஆம்புலன்ஸ் நகர்ந்தது.

மறுநாள் போலீஸ் காவல் சகிதம் புவனநாயகி பாங்க் லாக்கரைத் திறந்து மாத்திரை பாட்டிலை எடுத்துத் தந்தாள்.

துரையரசன் அதை பாரன்ஸிக் லாபுக்கு அனுப்பினார்.

லாபில் இருந்து ரிப்போர்ட் வந்தது.

காப்ஸ்யூல்லில் ஆர்சனிக் விஷம் இருக்கிறது.

போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட் வந்தது.

சத்ரபதியின் குடலில் ஜீரணமாகாத காப்ஸ்யூல் இருந்தது. அவருடைய உடல் ஆர்சனிக் விஷத்தால் பாதிக்கப்பட்டு இருந்தது.

புவனநாயகி கண்ணீர் விட்டாள்.

துரையரசன் அவளைச் சமாதானப்படுத்தினார். நஷ்ட ஈடு கேட்டு பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸ் மீது வழக்கு போடச் சொன்னார்.

புவனநாயகியை வக்கீலிடம் அழைத்துப் போனார். வக்கீல் இருபது லட்சம் வரை பணம் கேட்கலாம் என்று சொன்னார்.

கோர்ட்டில் கேஸை பைல் செய்தார்கள். அந்த வழக்கை பைல் செய்யும்போதுதான் துரையரசனுக்கு நீரஜாவின் கேஸ் நினைவிற்கு வந்தது.

நீரஜாவின் பெற்றோர்களைச் சந்தித்தார். காவ்யாவின் எதிர்காலத்திற்காவது அவர்களும் பெஸ்ட் பார்மாசூட்டி



கல்ஸ்காரர்களிடம் நஷ்ட ஈடு கேட்டு வழக்குத் தொடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

அவர்கள் இருபது லட்சம் நஷ்ட ஈடு கேட்டுத் தொடர்ந்தார்கள்.

பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸின் எம்.டி. இந்த முறை லேசான மாரடைப்புக்கு உள்ளானார். இன்டென்ஸிவ் கேர் யூனிட்டும், இருபத்து நான்கு மணி நேர சிகிச்சையும் அவரை மறுபடி சகஜ நிலைக்குக் கொண்டு வந்தது.

சகஜ நிலைக்கு வந்ததும் எம்.டி. ஒரு தீர்மானத்திற்கு வந்தார்.

## 6

''ஹலோ... துரையரசன் ஹியர்.''

''சார் நான் புவனா.''

''என்னம்மா?''

''இவ்வளவு அன்பாக என்னைச் சொந்தச் சகோதரி போல் நினைத்துப் பழகுகிற இன்னொரு போலீஸ் ஆபீசரை நான் இந்த ஜென்மத்தில் பார்க்கப் போவதில்லை சார்.''

''ஐஸெல்லாம் வேண்டாம். என்ன விஷயம் புவனா, சொல்லுங்கள். உங்கள் கேஸ் ஹியரிங்கிற்கு வருவதற்கு இன்னும் கொஞ்சம் நாட்களாகும் போல் தெரிகிறது.''

''அது வரும்போது வரட்டும் சார். எனக்குப் பணத்தை விட அந்த மருந்துக் கம்பெனிக்குப் புத்தி வர வேண்டும் என்பதுதான் பெரிதாகப்படுகிறது. எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும் சார்.''

''என்ன?''

''சத்ரபதி இறப்பதற்கு ஆறு மாதத்திற்கு முன்னால் ஆல்வேர்ல்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் புதிதாக ஒரு பாலிசி எடுத்திருக்கிறார் சார்.''

''அப்படியா? அது எப்படி உங்களுக்குத் தெரிந்தது?''

''நேற்று அவருடைய லாக்கரில் இருக்கும் உடமைகளை எல்லாம் எடுத்துக் கொள்ள பாங்க்கில் என்னை அனுமதித்தார்கள். பாங்க்கில் அவர் என் பெயர் நாமினியாகப் போட்டிருக்கிறார். வழக்கமான பார்மாலிட்டிகளுக்குப் பிறகு பாங்க்கில் என்னை லாக்கரைத் திறந்து அதில் இருப்பதை எல்லாம் என் பெயரில் இருக்கும் லாக்கருக்கு மாற்றச் சொன்னார்கள். அப்போதுதான் இந்த பாலிசி கிடைத்தது.''

''ஐ.ஸீ.''

''லாக்கரில் என்னவெல்லாம் இருந்தது என்று கேட்டால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள் சார். கீழாநெல்லி விதை, நாய்க்கடுகு, வசம்பு, சித்தரத்தை என்று மூலிகை சமாச்சாரமாக வைத்திருக்கிறார். அப்புறம் அவருடைய அம்மா வைத்துவிட்டுப் போன நகைகள். ஒரு இருபத்தைந்து சவரன் கூடவே இந்த இன்ஷ்யூரன்ஸ் பாலிசி.''

''எவ்வளவு ரூபாய்க்குப் பாலிசி?''



''இருபத்தைந்து லட்சம்.''

''கிரேட். அவ்வளவு பெரிய தொகையா? நீங்கள் உங்கள் ஜாதகத்தை ஏதாவது ஒரு ஜோசியரிடம் காட்டுங்கள். உங்களுக்கு சுக்ரதசையோ என்னவோ?''

''இல்லை சார். பணம் கிடைக்காது.''

''ஏன்?''

''அந்த பாலிசி ஒரு வினோதமான பாலிசி. சத்ரபதி சாதாரணமாக இறந்தால் அந்த பாலிசி மூலம் பணம் எதுவும் கிடைக்காது.''

''பின்னே?''

''விபத்தில் இறந்தால்தான் அவருடைய வாரிசுக்குப் பணம் கிடைக்கும்.''

''இது என்ன வினோதமான பாலிசியாக இருக்கிறதே.''

''ஆல் வேர்ல்ட் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி இப்போது தானே ஆரம்பிக்கப்பட்டது?''

''ஆமாம்.''

''நிறைய பிஸினஸ் பண்ண வேண்டும் என்பதற்காக அவர்கள் புதுப்புது ஸ்கீம்களை அறிமுகப்படுத்தினார்கள். அதில் ஒன்றுதான் இந்த ஆக்ஸிடெண்ட் பாலிஸி ஸ்கீம். இதன்படி பாலிசி எடுத்துக் கொண்டால், விபத்தில் இறந்தால்தான் பணம் கிடைக்கும். நிறைய பிஸினஸ் பண்ண வேண்டும் என்பதற்காக, பாலிசிதாரர்களுக்கு குறைந்த பிரீமியத்திற்கு நிறைய பணம் கொடுப்பதாகக் கான்வாஸ் பண்ணி அவர்கள் ஆள் சேர்க்கிறார்கள். புரொபசர் அந்த கம்பெனியில் இருக்கும் டிவிஷனல்

மேனேஜர் ஒருவரின் தொந்தரவு தாங்க முடியாமல் பாலிசி எடுத்தார். பிரிமீயம் மாதம் 250 ரூபாய் தான். பாலிசி அமவுன்ட் இருபத்தைந்து லட்சம். இதற்கு பீரியட் எல்லாம் கிடையாது. நாம் ஒருமுறை பாலிசி எடுத்தால் சாகும்வரை கட்ட வேண்டும். ஏதாவது விபத்தில் செத்தால் 25 லட்சம் - 250 ரூபாய் பிரிமீயத்திற்கு. இயற்கையான சாவு என்றால் அதற்கு மேல் பிரீமியமும் கட்ட வேண்டியதில்லை. பாலிசிதாரருடைய வாரிசுக்கு எந்தப் பணமும் வராது. நான் போன் பண்ணியது எதற் கென்றால் லாக்கரை நான் திறந்தேன். அதுவும் அவர் பெயரில் இருக்கிற லாக்கரை. அதில் எனக்கு ஒரு 25 பவுன் நகை கிடைத்திருக்கறது. அந்த 25 பவுன் நகையை விற்றால் மருந்துக் கம்பெனி மேல் போட்டிருக்கும் வழக்கிற்கு ஆகும் செலவை சரிக்கட்டி விடலாம் என்று சொல்வதற்காகத்தான்.''

''புவனா, வெயிட்.''

''என்ன ஸார்? ஒரே எக்ஸைடட் ஆகப் பேசுகிறீர் கள்?''

''இல்லை விபத்து என்றால் உங்களுக்கு 25 லட்சம் பணம் கிடைக்கும் இல்லையா?''

''ஆமாம்.''

''பாலிசியில் விபத்து என்ற சொல்லுக்கு என்ன பொருள் என்று டிபைன் பண்ணியிருக்கிறார்களா?''

''ஓ.''

''படியுங்களேன்.''



''ஏன் சார்?''

''படியுங்களேன் சொல்கிறேன்.''

''எதிர்பாராமல் ஓடும் வாகனங்களில் பிரயாணம் செய்து மோதலில் சிக்கி இறந்தாலோ, விமான பயணத்தின் போது விமானம் மோதிச் சிதறுவதால் இறந்தாலோ, நடக்கும்போது வண்டி வந்து மோதியதால் இறக்க நேர்ந்தாலோ, ரயில் வண்டிப் பிரயாணத்தின் போது நேரும் எதிர்பாரா மோதல்களால் இறக்க நேர்ந்தாலோ, எதிர்பாராதது எதன் காரணமாவது இறக்க நேர்ந்தாலோ, உதாரணம் நீரில் மூழ்குதல், நெருப்பில் சிக்குதல், உணவே விஷமாதல் என்று இன்னும் வரிசையாய் எழுதிக் கொண்டே போயிருக்கிறார்கள் சார். பெயிண்ட் அடிக்கும் போது கீழே தவறி விழுந்தால்கூட விபத்து என்று சொல்லி யிருக்கிறது. தற்கொலைக்கு இல்லை.''

''தட்டிஸிட் புட் பாய்ஸனிங் இருக்கிறதில்லையா?''

''இருக்கிறது.''

''ஸோ. பாய்சனிங் இருக்கிறது. உங்கள் கணவர் மருந்து உடலைக் குணமாக்கும் என்று நினைத்துத்தானே சாப்பிட்டார்?''

''ஆம்.''

''அந்த மருந்தில் விஷம் இருக்கிறது என்று தெரிந்தால் சாப்பிட்டிருக்க மாட்டார் இல்லையா?''

''இல்லை.''

''அப்படியானால் இதுவும் ஒரு விபத்துதான். நீங்கள் தானே வாரிசுதாரர்?''

''ஆமாம்.''

''அப்படியானால் க்ளெய்ம் பண்ணுங்கள்.''

''வேண்டாம் சார். நான் பணத்திற்காக அலைகிறவள் என்று பேர் எடுத்து விடுவேன். மருந்து கம்பெனி பணம் கொடுத்தால் அதுவே போதும். அதை நான் வேலை பார்க்கும் குழந்தைகள் காப்பகத்திற்குச் செலவு செய்வேன். இம்ப்ரூவ் பண்ணுவேன். என் சாப்பாட்டிற்குப் பணம் இருந்தால் எனக்குப் போதும்.''

''என்ன இது. சின்னக் குழந்தை மாதிரி. 25 லட்சம் வந்து, உங்களுக்கு வேண்டாமென்றால் நீங்கள் வளர்ந்த அனாதை இல்லத்திற்கு எழுதி வைத்து விட்டுப் போங்கள். யார் வேண்டாம் என்று சொல்லப் போகிறார்கள். உங்களுக்கு இது ஜாக்பாட் நேரம். நானே வந்து அந்த பாலிசியைப் பார்க்கிறேன். க்ளெய்ம் எப்படிப் போடுவது என்று தெரிந்து கொண்டு அப்ளை செய்து விடுவோம். ஓ.கே.?''

''ஓ.கே.! சார்.''

## 7

ஆல் வேர்ல்ட இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் க்ளெய்ம்ஸ் டிபார்ட்மென்டின் மேனேஜர் அனந்த நாராயணன் இளைஞன். ரேமண்ட்ஸ் பாண்ட், ரேமண்ட்ஸ் ஷர்ட், பார்க் அவென்யூ சென்ட் என்று பரிமளிப்பவன். தோற்றத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுப்பவன். என்றாலும் வெறும் மைனர் ஜாலி மணிபர்ஸ் காலி ஆசாமி இல்லை. வேலை தெரிந்தவன். அவன் டிபார்ட்மென்டிற்கு ஒரு க்ளெய்ம் வருகிறது என்றால் விண்ணப்ப பாரத்தைப் பார்த்தே அதில் ஏதாவது கோல்மால் இருக்கிறதா என்று கண்டு பிடிப்பவன். ஏதாவது தீசல் வாசனை வருகிறதா என்று மோப்பம் பிடிப்பவன்.



புவனநாயகியின் கையெழுத்திட்ட விண்ணப்ப பாரம் அவன் மேஜையை அடைந்தவுடன் எடுத்துப் பார்த்தான். அவன் ஒரு பாரம் சரியாக இருக்கிறதென்று சொல்லி விட்டால் சரியாக இருக்கும். அவன் ஒரு விண்ணப்பத்தில் கோளாறு இருக்கிறது என்று சொன்னால் அதில் கோளாறு இருக்கும்.

புவனநாயகியின் விண்ணப்ப படிவத்தைப் படித்த போது அவனுக்கு எந்தக் கோளாறும் புலப்படவில்லை. இறந்து போன சத்ரபதிக்கு புவன நாயகிதான் வாரிசா? ஆமாம். ஒரே வாரிசா? ஆமாம். அதற்கு உண்டான ஆதாரங்கள் எல்லாம் சரியாக இருக்கிறதா? இருக்கிறது.

புரொபசர் சத்ரபதி பற்றி அவனுக்கு நன்றாகவே தெரியும். அவர் கல்யாணமே வேண்டாம் என்று இருந்தது தெரியும். அவருக்கு ஒரே ஒரு அக்கா இருந்து அவர்களும் முன்பே இறந்து விட்டதும் தெரியும்.

புவனநாயகியை செக்ரட்டரியாக வைத்துக் கொண்டதும், புவனநாயகி அவர்பால் காதல் வயப்பட்டதும் தெரியும். புரொபசர் முன்பே அவனிடம் சொல்லி

இருந்தார். எனவே பணம் புவனநாயகியின் கைக்கு போனால் எந்தவிதமான வாரிசுப் பிரச்னையும் வராது.

புவனநாயகியை அவன் பார்த்திருக்கிறான். அனந்த நாராயணன் தங்கை அலமேலு யூனிவர்சிடியில் புரொபசரிடம் பாடனி பயின்றவள். அவள் மூலம் தான் புவன நாயகி - புரொபசர் காதல் பற்றி அவனுக்குத் தெரிய வந்தது. அப்போது ஒரு அகடமிக் இன்ட்ரெஸ்டிற்காகப் புவனநாயகியைப் பார்த்தான்.

புவனநாயகி மீது அவனுக்கு இன்ஸ்டன்ட் காதல் பிறந்தது. அவன் அவ்வளவு வசீகரமாயிருந்தாள். அவளுடைய காதல் அவனுக்குள் தனக்கில்லாது போனதே என்ற எண்ணத்தைத் தோற்றுவித்ததே தவிர, புவன நாயகியின் காதல் பற்றி அவனுக்கு எந்த வியப்பும் எழவில்லை.

காரணம், காதலுக்குக் கண்ணில்லை என்பதை அவன் அறிவான்.

மறுபடி காரணம். இந்த மாதிரி வயதான ஆண்கள் இளம் பெண்களை ஈர்த்து மணம் புரிந்து கொள்வதை அவன் தன் வாழ்க்கையில் அடிக்கடி சந்தித்திருக்கிறான். அதனால் புவன்நாயகியின் விண்ணப்பத்தில் ஒரு நேர்மை இருக்கிறது என்றுதான் தோன்றியது.

இருந்தாலும் -

யாவற்றையும் மீது அவன் மூளையில் ஒரு ஓரத்தில் ஒரு எச்சரிக்கை மணி அடித்துக் கொண்டே இருந்தது. எதனால் என்று தெரியவில்லை. அவனுக்கு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி க்ளெய்ம்ஸ் டிபார்ட்மென்டில் மட்டும் 15 வருடம் சர்வீஸ். வேறு வேறு கம்பெனிகளில்.



ஆல் வேர்ல்டு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி அவனது முந்தைய அனுபவத்திற்காக, திறமையான செயல் பாட்டிற்காக அவனை வேலைக்கு வைத்துக் கொண்டிருந்தது. நிறைய சம்பளம். கார், க்வார்ட்டர்ஸ். வேலைக்காரர்கள். பர்னிச்சர்கள். நான்கு வருடங்களுக்கு ஒரு முறை குடும்பத்துடன் உலகின் எந்தப் பாகத்திற்கும் போய் வர விமானப் பயண அனுமதி செலவிற்குக் காசு.

இத்தனை காரணங்களால் அனந்த நாராயணன் கம்பெனிக்கு மிகவும் உண்மையாக உழைத்தான். அதனாலேயே எங்கேயாவது எச்சரிக்கை மணி அடித்தால் உதாசீனம் செய்யாமல் ஆராயத் தொடங்கினான். அவனுக்குள் எச்சரிக்கை மணி அடித்து அதை உதாசீனம் செய்த போதெல்லாம் சின்னச் சின்ன தொகைகள். அதனால் நிறைய பாதிப்பு ஏற்படவில்லை.

இப்போது தொகை இருபத்தைந்து லட்சம் என்பதால் அவனுக்கு லேசாகக் குளிரெடுத்தது. புவனநாயகியை நேரில் பார்த்து விடுவது என்று தீர்மானித்தான்.

''ஓ ஹலோ'' என்று அவனை வரவேற்றாள் புவன நாயகி.

அனந்தநாராயணன் உள்ளே நுழைந்து சோபாவில் அமர்ந்து காபி சாப்பிட்டு விட்டு பேசத் தொடங்கினான்.

''ஜஸ்ட் ஒரு ருட்டீன் செக். நீங்கள் 25 லட்சம். ரூபாய்க்கு க்ளெய்ம் போட்டிருக்கிறீர்கள் இல்லையா... அதனால்...''

''என்ன கேட்க வேண்டுமோ கேளுங்கள்.''

''அந்த காப்ஸ்யூலை நீங்கள் எங்கே வாங்கினீர்கள்?''

''இங்கேதான் ஒரு மருந்துக் கடையில். பெரிய டிபார்ட் மென்ட் ஸ்டோரும், மருந்துக் கடையும் சேர்ந்தது. ஆல் நீட் டிபார்ட்மென்டல் ஸ்டோர். வரும் வழியிலேயே நீங்கள் பார்த்திருக்கலாம்.''

''யெஸ். யெஸ். எப்போது வாங்கினீர்கள்? பில் இருக் கிறதா?''

''பொதுவாக வைட்டமின் காப்ஸ்யூல்களெல்லாம் ஹார்லிக்ஸ், போர்ன் விடா வாங்குகிற மாதிரித்தானே அனந்த நாராயணன். இதற்கெல்லாம் யார் பில் போடு வார்கள். இருந்தாலும், பைலக் என்று தான் சொல்ல வேண்டும். புரொபசருக்கு மற்ற மருந்துகளையும் வாங்கியதால் இதையும் சேர்த்து வாங்கும்போது பில் போட்டே வாங்கியிருக்கிறேன். பார்க்கிறீர்களா?''

''ஒரு ஜெராக்ஸ் காப்பி இருந்தால் நன்றாக இருக் கும்.''

''தருகிறேனே. ஜெராக்ஸ் காப்பி கூட வைத்திருக் கிறேன். புரொபசருக்கு ஒவ்வொரு மாதமும் எவ்வளவு செலவாகிறது என்ற வீட்டுக் கணக்கைத் தர வேண்டும். வெறும் செலவு மட்டும் காட்டினால் போதாது. சப்போர் டிங்காக பில்லையும் வைக்க வேண்டும். கணக்கை பில்களுடன் ஆடிட்டருக்கு அனுப்புவதால் ஒவ்வொரு பில்லையும் ஜெராக்ஸ் எடுத்து வைத்து விடுவேன். ஜெராக்ஸ், ஒரிஜினல் என்று இரண்டு காப்பி இருந்தால் எவ்வளவு காப்பி வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ள லாம் இல்லையா?''



''ரைட் நீங்கள் மிகவும் திட்டமிட்ட வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கிறீர்கள் என்று நினைக்கிறேன். அப்புறம் இன்னொரு கேள்வி. பொதுவாக சத்ரபதியின் பாரம்பரியப் பழக்கம் என்பது இறந்தால் உடலை எரித்து விடுவதுதானே வழக்கம். எப்படி இவர் கேஸில் அப்படி நடக்கவில்லை. சத்ரபதியின் உடலை ஏன் புதைத் தீர்கள்?''

''நீங்கள் இன்ஷ்யூரன்ஸ் பணம் தராவிட்டால் பரவா யில்லை. நான் வருத்தப்பட மாட்டேன். என்னை சந் தேகிக்கிற மாதிரி கேட்பதுதான் என்னால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.''

''கோபப்படாதீர்கள். அதுதான் முன்பே சொன்னேனே. இது ஒரு ருட்டீன் செக் அப் என்று? ஒரு கேஸ் போலீ சிடம் போனால், குற்றவாளி அல்லாதவர்களையும் அவர்கள் எப்படியெல்லாம் பாடு படுத்தி விசாரிக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். நான் க்ளெய்மை ரெகமண்ட் பண்ணும்போது, இந்த க்ளய்மிற்குப் பணம் கொடுக்கலாம் என்று சொல்லிக் கையெழுத்துப் போட வேண்டும் இல்லையா? நான் சரியாக விசாரிக்காமல் கையெழுத்துப் போட்டேன் என்று மேனேஜ்மென் டிற்குத் தெரிந்தால் எனக்கு வேலை போய்விடும் மேடம்.''

''ரைட். அது புரொபசரின் சென்டிமென்டிற்கு மரியாதை கொடுப்பதற்காக. அவர் இந்த வீட்டை நேசித்தார். தோட்டத்தை நேசித்தார். தோட்டத்தில் இருக்கும் ஒவ் வொரு புல்லையும் காதலித்தார். அவர் பாட்டனி புரொபசர்

என்று உங்களுக்குத் தெரியும். அவர் இறந்தபின் எங்கேயோ கொண்டு போய் எரிக்கப்பட்டு சாம்பலாவதை விடவும், இந்த தோட்டத்து மண்ணிற்கு உரமாவதை மிகவும் விரும்பினார். அதனால் அவர் இந்தத் தோட்டத்திலேயே தன் உடலைப் புதைக்கச் சொன்னார். அவர் அப்படிச் சொன்னதால்தான் அவர் உடலை எடுத்து மறுபடி போஸ்ட் மார்ட்டம் செய்ய முடிந்தது. ஆர்சனிக் ஸ்லோ பாய்சனில் அவர் செத்துப் போனார் என்று அதனால்தான் தெரிந்தது.''

''புதைக்கச் சொல்லி அவர் எப்போது சொன்னார்?''

''வைரல் ஃபீவரில் படுத்துக் கொண்டிருந்தார். அதனால் வாந்தி, தலை சுற்றல், டையோரியா எல்லாம் இருந்தது. வைரல் ஃபீவருக்கு ட்ரீட்மென்ட் கொடுத்தப்போ, அவர் உடம்பு தேற வேண்டும் என்பதற்காக நான் டாக்டர் சொன்னபடி வைட்டமின் காப்ஸ்யூல் வாங்கித் தந்தேன். அவர் உடம்பு சரியாகவில்லை. நாளுக்கு நாள் வீக்கானார். அவருக்கே ஒரு மாதிரி பயம் வந்து விட்டது. என்னைக் கூப்பிட்டார். அருகே போனேன். 'என் ஆசை ஒன்றை நிறைவேற்றுவாயா?' என்று கேட்டார். 'என்ன ஆசை?' என்று கேட்டேன். ரைட்டிங் பாட் எடுக்கச் சொன்னார். எடுத்துக் கொடுத்தேன். அதில்தான் அவர் எழுதியே தந்தார். தான் இறந்தால், தன்னை தோட்டத்தில் புதைக்கும்படி. நான் படித்துவிட்டு அழுதேன். என் முதுகைத் தட்டிக் கொடுத்தார். 'எல்லாம் சரியாகி விடும்' என்றார். அதுதான் அவர் என்னுடன் கடைசியாகப் பேசியது. அதற்கப்புறம் அவர் பேசவே இல்லை.''



''அந்த லெட்டரை நான் பார்க்க முடியுமா?''

''கார்ப்பரேஷன் ஆபீஸ் போனால் பார்க்கலாம். நான் அவர் உடலைத் தோட்டத்தில் புதைப்பதற்கு கார்ப்பரேஷனிடம் பர்மிஷன் வாங்க வேண்டியிருந்தது. அந்த லெட்டரை கார்ப்பரேஷனில் கொடுத்து விட்டுத்தான் பர்மிஷன் வாங்கினேன்.''

அனந்தநாராயணன் நன்றி தெரிவித்துவிட்டு எழுந்து கொண்டான். வெளியே வந்தான். கார்ப்பரேஷன் அலுவலகத்திற்குச் சென்று புவனநாயகி குறிப்பிட்ட அந்தக் கடிதத்திற்கு ஒரு நகலை எடுத்துக் கொண்டான். கடிதம் மிகச் சுருக்கமாக இருந்தது.

*புவனா என் கடைசி ஆசை. நான் என் தோட்டத்தில் புதைய விரும்புகிறேன். புதைக்கவும். - சத்ரபதி.*

கடிதம் சுருக்கமாக இருந்தது அனந்தநாராயணனுக்கு ஆச்சரியத்தைத் தரவில்லை. அது தமிழில் எழுதப்பட்டிருந்ததுதான் அவனுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. சத்ரபதி தமிழில் பேசுவார். அதுவே கொஞ்சம் கொச்சையாகத்தான் இருக்கும். அவர் மஹாராஷ்ட்ரத்து ஆசாமி. அவருக்கு இவ்வளவு தெளிவாகத் தமிழ் எழுத முடிந்திருக்கிறது என்பது ஆச்சரியம்தான்.

அனந்த நாராயணன் ஒரு தீர்மானத்திற்கு வந்தான்.

# 8

இன்ஸ்பெக்டர் துரையரசனின் அலுவலகம். அதை ஏற்கனவே பார்த்திராதவர்களுக்குக் கொஞ்சம் ஆச்சரியம் தரும் அலுவலகம். அவருடைய ஆபீஸ் என்பது ஒரு தனி போலீஸ் ஸ்டேஷன். நகரின் எந்த போலீஸ் ஸ்டேஷனுடனும் ஒட்டாதது.

பிரதான சாலையில் அமைந்திருந்தது. பிரதான சாலை அகலமான தார்ச்சாலை. எதிரெதிர்ப் பக்கங்களில் இரண்டிரண்டு வரிசைகளில் எப்போதும் வாகனங்கள் விரைந்து கொண்டே இருக்கும். வாகனங்களின் ஹாரன் ஒலிகள் இடைவிடாது கேட்கும். அந்தப் பிரதேசத்தில், முதல் மாடியில் இன்ஸ்பெக்டர் துரையரசனின் அலுவலகம் அமைந்திருந்தது. வெளி உலகின் சத்தம் அந்த அறையைத் தொடாத மாதிரி அறையை கண்ணாடிச் சுவர்கள் பாது காத்தன. சூரியனின் வெப்பம் ஒரேயடியாகத் தாக்காத மாதிரி அந்தக் கண்ணாடிகளில் ஸன் கண்ட்ரோல் பிலிம்கள் ஒட்டப்பட்டிருந்தன.

அந்த அறையில் துரையரசன் உட்கார்ந்திருந்தார். டைப்ரைட்டர் இப்போது எலக்ட்ரானிக் டைப்ரைட்டராக மாறியிருந்தபடியால் எப்போதும் ஒலிக்கும் டக, டக சத்தம் இப்போது அடங்கியிருந்தது.

துரையரசனின் முன்னால் வறுத்த வேர்க்கடலை, டீ. அதே போல் அவர் முன்னால், எதிரில் அமர்ந்திருந்த அனந்தநாராயணன் பக்கத்திலும் வேர்க்கடலை,



டீ. அவனுக்குப் பக்கத்தில் அமர்ந்திருந்த பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸ் மருந்து கம்பெனியின் மேனேஜிங் டைரக்டரின் அருகிலும் அதே வறுத்த வேர்க்கடலை, டீ.

மேனேஜிங் டைரக்டர் தான் முதலில் பேசத் தொடங்கினார்.

''சார். நாங்கள் என்னவோ புவனநாயகிக்குத் துரோகம் பண்ணுவதாக நினைத்துக் கொண்டு நீங்கள் எங்கள் மேல் கேஸ் போடுவதற்கு உதவியாய் இருந்திருக்கிறீர்கள். உங்கள் கடமை உணர்வை நான் தப்பே சொல்லவில்லை. வரவேற்கிறேன். ஆனால், நீங்கள் ஒன்று யோசித்துப் பார்க்க வேண்டும்...

''எங்களுடைய வைட்டமின் காப்ஸ்யூலில் நாங்கள் ஆர்சனிக் விஷத்தைக் கலப்பதால் எங்களுக்கு எந்த லாபமுமில்லை. அந்த விஷத்தைக் கலப்பதால் என்ன சாதிக்கப் போகிறோம்? நாங்கள் அந்த காப்ஸ்யூலை எங்கள் லாபில் டெஸ்ட் பண்ணிப் பார்த்தோம். அது சோடியம் கார்பனேட்டில் கலந்த ஒயிட் ஆர்சனிக். வெள்ளை பவுடர். எங்கள் மருந்து தயாரிப்புக்கு உதவும் எங்களின் எந்த பேஸ் மெட்டீரியலிலும் ஆர்சனிக்கே இல்லை. நீங்கள் எங்கள் பர்சேஸை எல்லாம் பார்த்தால் தெரியும். நாங்கள் ஆர்சனிக் வாங்குவதே இல்லை என்று தெரியும்.''

''ரைட் சார். உங்கள் காப்ஸ்யூல் பாட்டிலுக்கு சீல் எல்லாம் கிடையாதா?''

''அன்பார்ச்சனேட்லி, இல்லை. குழந்தைகள் கூட எங்கள் காப்ஸ்யூல்களைச் சாப்பிடலாம். ஒன்றும் ஆகாது

என்று ப்ரூவ் பண்ணுவதற்காகவே அதை வெறும் பஞ்சால் மூடி ஒரு முயல் முகம் போல மூடி போட்டு விற்கிறோம். அதற்கு மார்க்கெட்டில் நல்ல ரிசப்ஷன்.''

''யார்தான் விஷம் கலந்த காப்ஸ்யூலை வைத்திருப்பார்கள் என்கிறீர்கள்?''

''அதைக் கண்டு பிடிக்கச் சொல்லிக் கேட்கத்தான் வந்தேன். நான் நஷ்ட ஈடு கொடுக்கப் பயப்படவில்லை. கம்பெனியின் குட் வில் போய் விடும். எவ்வளவு செலவானாலும் பரவாயில்லை. நீங்கள் காப்ஸ்யூலில் யார் விஷத்தை வைத்தார்கள் என்பதைக் கண்டு பிடித்துக் கொடுங்கள். ஒரு குடிமகனாக உங்களிடம் இந்த வேண்டுகோளை வைப்பதற்கு எங்களுக்கு முழு உரிமையும் இருக்கிறது என்று நான் நினைக்கிறேன்.''

இன்ஸ்பெக்டர் துரையரசன் டீயை எடுத்து உறிஞ்சினார். மேனேஜிங் டைரக்டரின் பேச்சில் உண்மை இருக்கிற மாதிரித் தோன்றியது. அவர் புகார் எழுதிக் கொடுத்தால் காப்ஸ்யூலில் யார் விஷத்தை வைத்தது என்று கண்டு பிடிக்க வேண்டியது அவர் கடமை, என்ன செய்வது?

''பின்னே தோட்டத்தில் என்னை ஏன் அடித்துப் போட வைத்தீர்கள். பணம் இருக்கிற திமிரில்தானே?''

''ஐயோ. நான் அப்படி எதுவும் செய்யவில்லை ஸார். நான் எந்த லை டிடெக்டர் முன்பாகவும் நின்று வாக்குமூலம் கொடுக்கிறேன். எங்கள் காப்ஸ்யூலில் இருக்கும் மருந்து தானாக விஷமாக மாறி விட்டது என்றால் நான் அந்த மாதிரி செயலில் எல்லாம் இறங்க ஒரு காரணம்



இருக்கிறது. ஆனால், அப்படி நடக்கவில்லையே. காப்ஸ்யூலில் இருக்கும் மருந்தை எடுத்துவிட்டு யாரோ, ஆர்சனிக் விஷத்தை வைத்திருக்கிறார்கள் என்று தானே சொல்கிறேன். எங்களுக்கு என்ன மோட்டிவ் இருக்கிறது? நாங்கள் எதற்கு விஷத்தை காப்ஸ்யூலில் வைக்க வேண்டும்.''

''நீங்கள் எதற்கு என்னைப் பார்க்க வந்தீர்கள் ஆனந்த நாராயணன்?''

''காப்ஸ்யூலில் யார் விஷத்தை மாற்றி வைத்தார்கள் என்று நீங்கள் கண்டு பிடிக்க வேண்டும் என்று ரிக்வெஸ்ட் பண்ணத்தான் சார்'' என்றான் அனந்த நாராயணன். ''சட்டப்படி பார்த்தால் நாங்கள் புவனாவிற்கு இருபத்தைந்து லட்சம் கொடுக்க வேண்டி இருக்கிறது. ஆனால், கொடுப்பதற்கு முன் ஒரு முறை நாங்கள் எங்களையே திருப்திப்படுத்திக் கொள்ள வேண்டும். காப்ஸ்யூலில் யார் விஷத்தைக் கலந்து வைத்தார்கள் என்பது தெரிந்தால் க்ளெயிம் பணத்தை செட்டில் பண்ண வசதியாக இருக்கும்.''

துரையரசன் யோசித்தார். ஒரு தீர்மானத்திற்கு வந்தார்.

## 9

துரையரசன் தனது புல்லட் மோட்டார் பைக்கை, சசிதரன் வீட்டு காம்பவுண்ட் கேட்டிற்கு முன் ஸ்டாண்ட்

போட்டு நிறுத்தினார். இறங்கினார். துரையரசனை மப்டியில் பார்ப்பது தனி அழகு. வெள்ளை பனியன். காலர் அருகே ஒரு நீலப்பட்டி கைச்சுற்றளவு முனை ஒரு நீலப்பட்டி சிம்ப்பிளாக கிராண்டாக இருந்தது. அது கீழே வெள்ளை நிற ஆஃப் பாண்ட் காலில் ஒரு வெள்ளை ஷூ பாஷனுக்கேற்ற மாதிரி அந்த ஷூ மாறும். இப்போது பூமா அணிந்திருந்தார்.

காம்பவுண்ட் கேட் திறந்து அது ஆணையிட்டபடி மூடினார்.

பால்கனியில் வெள்ளை ஜிப்பாவில் சசி அமர்ந்திருந் தான். கருப்புக் கண்ணாடி அணிந்திருந்தான். அவரைப் பார்த்து அங்கிருந்தே கை அசைத்தான்.

''நீங்கள் வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன். செஸ் போர்டு தயாராக இருக்கிறது. காபி வேர்க்கடலை தயாராக இருக்கிறது.''

துரையரசன் தன் சம்மர் தொப்பியைக் கழற்றிக் கையில் வைத்துக் கொண்டு சசிதரனின் முன் உட்காந் தார்.

''நான் விளையாட வரவில்லை.''

''கேஸுக்காக வந்திருக்கிறீர்கள்.''

''ஆம்.''

''சொல்லுங்கள்.''

துரையரசன் கேஸைத் தொடக்கத்திலிருந்து இந்த வினாடி வரைக்கும் சொன்னார். சசிதரன் அமைதியாகக் கேட்டான். கேட்டு முடிக்கும்போது இருவர் எதிரிலும் இருந்த காபிக் கோப்பைகள் காலியாகி இருந்தன.



''உங்கள் சந்தேகம் என்ன சொல்லுங்கள்'' என்று கேட் டான் சசிதரன்.

''நான் கொஞ்சம் முட்டாளாக இருந்து விட்டேன் சசிதரன். புவனநாயகியை நான் ரொம்பவும் நம்பிவிட் டேன் என்று நினைக்கிறேன். சத்ரபதி செத்தால் 25 லட்சம் இன்ஷ்யூரன்ஸ் பணம் கிடைக்கிறது என்றால் சத்ரபதி உண்மையிலேயே சாதாரணமாகச் செத்தாரா, இல்லை கொல்லப்பட்டாரா என்று ஆராய வேண்டும். இந்தக் கேஸில் சத்ரபதி ஏறக்குறைய கொல்லப்பட்டார் என்று புவனநாயகியே சொல்லிவிட்டாள். மருந்துக் கம்பெனி ஒன்று கொடுத்த காப்ஸ்யூலில் இருந்த விஷம் சத்ர பதியைக் கொன்று விட்டது என்று அவளே சொன்னதால் எனக்கு அவள் பேரில் சந்தேகமே வரவில்லை. மருந்துக் கம்பெனி மேல் தான் சந்தேகம் வந்தது. ஆனால், கொஞ்சம் ஆழமாகத் தோண்டிப் பார்த்தால் விஷயம் வேறு மாதிரி இருக்கிறது. இந்தக் கொலையை புவனநாயகி செய்திருப் பாளோ என்று தோன்றுகிறது.''

''எதனால்?''

''அவள் ரொம்பவும் திட்டமிட்டிருக்கிறாள். பிணத் தைத் தோட்டத்தில் புதைத்தாள். அப்படிப் புதைப்பதற்கு பர்மிஷன் வாங்கி இருக்கிறாள். சத்ரபதி எழுதிய லெட்டர் கார்ப்பரேஷன் ஆபீசில் இருக்கிறது. சத்ரபதி தமிழில் எழுதுவாரா என்றே ஆச்சரியம். புவனநாயகியின் தமிழ்க் கையெழுத்திற்கும் சத்ரபதி எழுதியதாகச் சொல்லப் படுகிற லெட்டரில் இருக்கும் கையெழுத்தும் ஒத்துப் போகவில்லை. கடிதத்தை அவள் சொல்லுகிற மாதிரி

சத்ரபதியே எழுதியிருக்கலாம். அவளுடைய தோட்டத்தில் நான் அடிபட்டேன். பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸ் ஆசாமிகள்தான் என்னை அடித்திருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டேன். ஆனால், அந்த நினைப்பே அஸ்திவாரம் இல்லாமல் ஆட்டம் காண்கிறது.

பெஸ்ட் பார்மாசூட்டிகலுக்கு, வைட்டமின் காப்ஸ்யூல் ஆர்சனிக் விஷத்தைக் கலப்பதால் எந்தவித லாபமும் இல்லை. மோட்டிவே இல்லாமல் அவர்கள் கொல்வார்களா என்ன? புவனநாயகி மேல் சந்தேகப்பட எந்தக் காரணமும் கண்டு பிடிக்க முடியவில்லை என்பதாலேயே எனக்கு அவள் மேல் சந்தேகம் வருகிறது.

காப்ஸ்யூலில் ஆர்சனிக் விஷத்தை மாற்றியது யார் என்று கண்டு பிடிக்க வேண்டும். பாரீசில் அந்த ஐந்து காப்ஸ்யூல் பாட்டில்களையும் வைத்திருந்த கடைக்காரரையும் கடையில் இருப்பவர்களையும் கூட நான் போலீஸ் விசாரணை செய்து விட்டேன். எவ்வளவு அடிவாங்கினாலும் அவர்கள் அழுகிறார்களே தவிர யாரும் செய்ததாகச் சொல்லவில்லை. ஸோ, எனக்கு வேறு வழியில்லை. உன்னைத் தேடி வந்துவிட்டேன்.''

''யோக அறைக்குப் போகலாமா?''

''அதற்குத்தானே வந்திருக்கிறேன்.''

''எனக்கு உதவ என்ன எடுத்து வந்திருக்கிறீர்கள்?''

''விஷம் கலந்த காப்ஸ்யூல் பாட்டில்தானே இந்தக் கேஸின் மெயின் விவகாரம். அதனால் அதையே எடுத்து வந்திருக்கிறேன்.''

''அது போதும் வாருங்கள். யோக அறைக்குப் போவோம்.''



யோக அறை என்று சசிதரன் சொன்னது பொதுவாய் மற்ற அறைகளைவிட நான்கு படிகள் இறங்கியவுடன் தாழ்ந்து இருந்தது. அகலமான ஜன்னல்கள் வழியே சதா வீசும் கடற்காற்று. சாயங்காலப் பட்சிகளின் ரகசியங்கள். கீழே விரித்திருந்த பாய்களைத் தவிர வேறு எந்தக் கூடுதல் பொருளும் இல்லாததால் கிளம்பும் மிகச் சன்னமான எதிரொலி.

சசிதரன் தன் ஜிப்பாவைக் கழற்றி விட்டு கண்களை மூடிக் கொண்டான். பாயில் மல்லாந்து படுத்தான். இரு கைகளின் விரல் நுனிகளாலும் நெஞ்சின் மையப் பகுதியில் தொட்டுக் கொண்டான், மௌனமானான்.

தரையெங்கும், சுவரெங்கும், கூரையெங்கும் ஒரே மௌனம், மின்விசிறி கூட கிடையாது. அதன் சப்தம் கூட சசிதரனை இந்த நிலையில் கலைத்து விடக் கூடும் என்று சொல்வான்.

துரையரசன் தன் ஷூக்களைக் கழற்றி விட்டு சசிதரனுக்கு அருகில் உட்கார்ந்து கொண்டார்.

சசிதரன் மெல்ல வியர்க்க ஆரம்பித்தான். அவன் மார்பில் இள முடிகளில் வியர்வை ஜாலம் செய்தது. மூன்று நிமிடங்கள் நகர்ந்திருக்கலாம். வலது கையை மட்டும் நெஞ்சிலிருந்து எடுத்தான். நீட்டினான். விரித்தான்.

அவனுடைய அந்த விரிந்த கையில், துரையரசன் தான் கொண்டு வந்திருந்த காப்ஸ்யூல் பாட்டிலை வைத்தார். தன் சட்டைப் பையில் இருந்து சின்னக் குறிப்புப் புத்தகத்தை எடுத்துத் தயாராக வைத்துக் கொண்டார்.

சசிதரனுக்கு நம்மையெல்லாம் விட ஒரு கூடுதல் சக்தி, ஈ.எஸ்.பி. என்று சுருக்கமாகச் செல்லமாகச் சொல் லப்படும், எக்ஸ்ட்ரா சென்ஸரி பர்சப்ஷன் என்று விரி வாகச் சொல்லப்படும் சக்தி இருக்கிறது என உங்களில் சிலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

சசிதரனுக்கு அந்த சக்தி இருக்கிறது. துரையரசன் ஏதாவது கேஸ்களில் மேலே எப்படித் தொடருவது என்று புரியாமல் குட்டிச் சுவரில் மோதி நிற்கும்போது, சசிதர னின் உதவியை அவர் நாடுவது வழக்கம். சசிதரன் யோக அறைக்குள் நுழைந்து மல்லாக்கப் படுத்து, கையில் குற்றம் நடந்த இடத்தில் இருந்து அது சம்பந்தமாக ஏதாவது ஒரு பொருளை வைத்தால், சசிதரனின் மனதில் சட் சட்டென்று மின்னல் மின்னலாக சித்திரமோ, வார்த் தையோ தோன்றுவது உண்டு.

துரையரசனின் குறிப்புப் புத்தகத்தில் அதை எழுது வார். துரையரசன் அந்தக் குறிப்புக்களை ஆதாரமாக வைத்துக் கொண்டு, கேஸில் முன்னேறுவார். இதுவரை சசிதரன் சொல்லி, துரையரசன் எந்தக் கேஸிலும் தோற்றதே இல்லை.

சசிதரனின் உதடுகள் மெல்லத் துடித்து விட்டுப் பேச ஆரம்பித்தன. துரையரசன் அவன் வாயிலிருந்து நழுவும் வார்த்தைகளைக் குறித்துக் கொள்ள ஆரம்பித்தார்.


'கவிதை...'

'லைப்ரரி...'

'ஜுவல்லரி...'



மூன்றே வார்த்தைகளை உதிர்த்தான் சசிதரன். கண் களை மூடியபடி, துரையரசனின் கையில் இருந்த குறிப்புப் புத்தகத்தைத் தன் கையில் வாங்கினான். பேனாவால் கீழே இருப்பது போல் ஒரு படம் வரைந்தான்.



சசிதரன் சடாரென்று உதறிக் கொண்டான். கண்களைப் பட் என்று திறந்தான் புன்னகைத்தான்.

''அவ்வளவுதான் இன்ஸ்பெக்டர்'' என்று மூக்கை அவன் பாணியில் உறிஞ்சிக் காட்டினான். ''என்ன வார்த் தைகள் சொன்னேன் இன்ஸ்பெக்டர்?''

''கவிதை, லைப்ரரி, ஜுவல்லரி என்று மூன்று வார்த் தைகள் சொன்னாய். அப்புறம் இந்த மீன் படம் போட்டுக் காட்டியிருக்கிறாய். என்ன அர்த்தம் இந்த மீன் படத்திற்கு?''

''முதல் மூன்று வார்த்தைகளுக்கு என்ன அர்த்தம் என்று தெரிந்து விட்டதா?''

''இல்லையே?''

''பின் மீன் படத்திற்கு மட்டும் அர்த்தம் கேட்டால் எப்படி? இனி மேல் அலைந்து திரிந்து கண்டு பிடிக்க வேண்டியது. உங்கள் வேலை இன்ஸ்பெக்டர்.''

''ஓ.கே.'' என்று துரையரசன் எழுந்து கொண்டார்.

''கேஸை முடிக்கும் வரை நான் இந்தப் பக்கம் தலையைக் காட்ட மாட்டேன்'' என்று சொல்லிவிட்டுப் படிகளில் வேக வேகமாகக் கீழிறங்கினார்.

# 10

கவிதை, லைப்ரரி, ஜுவல்லரி, மீன் படம். இந்த நான்கிற்கும், இந்த கேஸிற்கும் என்ன சம்பந்தம் இருக்க முடியும்?

கவிதை என்பது இப்போதெல்லாம் புத்தகத்தில் பில்லர் சமாச்சாரங்களாக வரத் தொடங்கி விட்டன. ஆயிரம் கவிஞர்கள், லட்சம் கவிதைகள் எழுதுகிறார்கள். கவிதை என்று பொத்தாம் பொதுவாக வார்த்தை வந்து விழுந்தால் என்ன அர்த்தம்? பாரதியார் கவிதையா, கண்ணதாசன் கவிதையா, வைரமுத்துக் கவிதையா? இல்லை மரபுக் கவிதையா? எதில் இருக்கிறது இந்த கேஸுக்கான விளக்கம்.

துரையரசன் ஒரு வாரம் முழுக்கச் செலவழித்து பாரதியார், வைரமுத்து, கண்ணதாசன், தமிழன்பன், ரவி சுப்ரமண்யன், அப்துல் ரகுமான், மீரா, மு.மேத்தா என்று எல்லோருடைய கவிதைப் புத்தகங்களையும் தன் மேஜைக்கு வரவழைத்துப் படித்துப் பார்த்தார்.

வாரம் முடிந்த பின் அவரது மூளைக்குள் கவிதைகள் வலம் வந்தன.

நெஞ்சுக்கு நிம்மதி, ஆண்டவன் சந்நிதி; நள்ளிரவில் பெற்றோம், இன்னும் விடியவே இல்லை; அறைக்குள் குப்பை, வேலைக்காரி குனிந்து நிமிர்ந்து பெருக்கினாள், அறை சுத்தமாச்சு, மனசு குப்பையாச்சு, கவிதை என்ன



விக்கிரமாதித்தப் புதிரா, எனக்காக எழுதாவிடில் எனக்குத் தெரிய எழுதாதீர்கள்; தானே தன்னானே, தானே தந்த னானே.

அவர் மனதில் ஆயிரம் கவிதைகள் உடைந்து உடைந்து வார்த்தைப் பொரிகளாய் இறைந்து வலம் வந்தன.

சசிதரன் கவிதை என்று சொன்னதற்கான அர்த்தம் தான் அவருக்குப் புரியவில்லை.

இந்தக் கேஸை வரிசைக் கிரமமாக ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று தோன்றியது.

என்ன நடந்தது? கமிஷனர் கூப்பிட்டார். நீரஜா என்றொரு பெண் காப்ஸ்யூல் சாப்பிட்டு இறந்ததைச் சொன்னார். அதே போல் அண்ணா நகரில் ஒரு பெண், தன் கணவன் அதே காப்ஸ்யூல் சாப்பிட்டு இறந்து போயிருக்கிறார் எனச் சந்தேகப்படுவதாகச் சொன்னாள். போய்ப் பார்த்தோம். புவனநாயகி. செதுக்கி வைத்த உருவம் கொண்டவள். மாடலிங், சினிமா என்று கலைத் துறையில் புகுந்தால் ஓகோவென்று பிரகாசிக்கக் கூடி யவள், என்று நாம் நினைத்தோம். கணவன் வயதானவன் புரொபசர். இவள் புரொபசரைக் காதலித்தாள். கல் யாணத்திற்குப் பின், குழந்தைகள் காப்பகத்தில் வேலைக் குச் சேர்ந்தாள். குழந்தைகளைப் பார்த்துக் கொள்ளும் வேலை. பெயர்கூட என்னவோ சொன்னாளே. ஜவஹர் குழந்தைகள் காப்பகம். ரைட் அங்கே போக வேண்டும். பார்க்க வேண்டும். விசாரிக்க வேண்டும். மிஸஸ் புவன நாயகி சத்ரபதி தன்னைப் புவனா என்று அழைக்குமாறு கேட்டுக் கொண்டாள். கணவனைத் தோட்டத்திலேயே

புதைத்திருப்பதாகச் சொன்னாள். அந்த லெட்டரை நாம் கூட பார்த்தோமே என்ன எழுதியிருந்தது.

புவனா. என் கடைசி ஆசை. நான் என் தோட்டத்தில் புதைய விரும்புகிறேன். புதைக்கவும் - சத்ரபதி.

அதுவே ஒரு கவிதை மாதிரித்தானே இருக்கிறது? புரொபசருக்கு இவ்வளவு நன்றாகத் தமிழில் எழுத வருமா? புரொபசரின் மற்ற தமிழ்க் கடிதங்கள் ஏதாவது இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். இது பாயிண்ட் நம்பர் டூ. அப்புறம் தோட்டத்தில் புரொபசரைப் புதைத்த இடத்திற்குக் கூட்டிப் போனாள்.

துரையரசனின் முகத்தில் திடீரென பல்பு எரிந்தது.

மீன் தொட்டி. போகும் வழியில் ஒரு மீன் தொட்டியைப் பார்த்தோமே புரொபசருக்கு மீன் வளர்ப்பது ஹாபி என்று சொன்னாளே. சசிதரன் மீன் படம் வரைந்து காட்டினானே. அந்த மீன் தொட்டிக்கும் இந்த கேஸிற்கும் என்ன சம்பந்தம்? முதலாவதாக அந்த மீன் தொட்டியைப் போய்ப் பார்க்க வேண்டும்.

மிஸஸ் புவனநாயகி, குழந்தைகள் காப்பகத்திற்குப் போயிருந்த நேரத்தில் துரையரசன் அந்த வீட்டுக் காம்ப வுண்டில் நுழைந்து பின்னால் சுற்றி வந்தார்.

மீன் தொட்டி இருக்கிறது. மேலே மூடியிருந்த வலையை நீக்கினார். கீழே தொட்டியில் வண்ண வண்ண மீன்கள் இருந்தன. சர், சர் என்று இப்படியும் அப்படியுமாய் நீந்தின. ஓடின. அவர் குனிந்து தொட்டியில் ஒரு விரலை வைத்த வுடன், அந்த ஏரியாவில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த மீன்கள் எல்லாம் தங்கள் மேல் இடியே விழுந்த மாதிரி



பதறி அடித்துக் கொண்டு ஓடின. ஒரு குழந்தையின் மனதோடு துரையரசன் மீன்களைப் பார்த்தார். தொட்டிச் சுவரோரம் ஒரே ஒரு மீன் மட்டும் ஒதுங்கி இருந்தது. அது ஓடவில்லை. தண்ணீரின் அலை அசைவிற்கேற்ப அதன் உடல் மேலும் கீழுமாய் போய் வந்தது. அந்த மீன் மட்டும் ஏன் அப்படி?

துரையரசன் அந்த மீனருகே கையைக் கொண்டு போனார். அப்போதும் அது அசையவில்லை. தொட்டார். மீன் புரண்டது. செத்துப் போயிருந்தது.

'பச்' என்று ஒரு செகண்ட் அந்த மீனுக்காகப் பரிதாபப் பட்டார். அந்த மீனைக் கையிலெடுத்தார். தன் கர்ச்சீப்பில் சுற்றிக் கொண்டார். எல்லா மீன்களும் ஓடியாடித் திரி யும்போது இந்த மீன் மட்டும் எதற்கு இப்படி செத்துப் போக வேண்டும். இதற்கு ஏதாவது குறிப்பிட்ட காரணம் இருக்கிறதா என்ன?

துரையரசன் இன்னொரு முறை தொட்டியைப் பார்த்தார். நல்ல சுத்தமான நீர்த் தொட்டி. நல்ல பராமரிப் புடன், நீரைக் களங்கமின்றிக் காட்டியது. தொட்டி சமீபத்தில் தான் கழுவப்பட்டிருக்க வேண்டும். புவனா விற்கு நளினம் இருக்கிறது. நாகரீகம் இருக்கிறது. அழகு இருக்கிறது. அதனால் எல்லாம் அவள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டவள் என்று சொல்ல முடியாது.

துரையரசன் பாரன்ஸிக் லாபில் அந்த மீனைக் கொடுத்து அதை ஆராயச் சொன்னார்.

முடிவு அவருக்கு ஆச்சரியத்தை அளித்தது.

மீன் செத்துப் போனது ஆர்சனிக் விஷத்தைச் சாப்பிட்ட தால், ஆர்சனிக் விஷம் அந்தத் தொட்டியில் இருக்கும் பாசியைப் போக்குவதற்காக உபயோகப்பட்டிருக்கிறது.

பொதுவாக மீன் தொட்டிப் பாசியைக் கழுவுவதற்கு சோடியம் கார்பனேட்டுடன் ஒயிட் ஆர்சனிக் கலந்த மிக்ஸரைக் கடைக்காரர்கள் தருவதுண்டு. அது மீன் தொட்டி விற்கும் இடங்களில் கிடைக்கும்.

'வாஹ்ரே வாஹ்' என்று தனக்குத்தானே ஒரு ஷொட்டு வைத்துக் கொண்டார் துரையரசன்.

மீன் தொட்டிப் பாசியைப் போக்க ஆர்சனிக் விஷத்தை உபயோகிப்பார்களா? வெரிகுட் அது மனிதர்களைக் கொல்லும் விஷம் என்று புவனநாயகிக்கு எப்படித் தெரிந்தது?

நேரடியாக புவனநாயகியைச் சந்தித்துவிட வேண்டியது தான் என்று தீர்மானித்தார் துரையரசன்.

## 11

புவனநாயகி வேலை செய்து கொண்டிருந்த குழந் தைகள் காப்பகம் அண்ணாநகர் மேற்கில் ஒரு குறுக்குத் தெருவில் இருந்தது என்று துரையரசன் விசாரித்து அறிந்து கொண்டார்.

புல்லட்டை அதை நோக்கிச் செலுத்தினார்.



அண்ணாநகரின் அந்தப் பகுதியில் ஏதோ ஒரு சின்ன ஆறு ஓடிக் கொண்டிருக்க (கூவமாகத்தான் இருக்க வேண்டும்) அதன் பக்கத்தில் ஓடிய சாலையில் சீரான வேகத்தில் புல்லட்டைச் செலுத்திய அவர் தான் தேடும் குறுக்குத் தெரு கிடைக்காமல், சாலையில் சைக்கிளில் வந்து கொண்டிருந்த ஒருவனை நிறுத்தினார்.

விசாரித்தார்.

"நீங்க மெயின் ரோடுக்கா வந்திருக்கணும் சார். பின்னாடி வழில வந்துட்டீங்களே."

"பரவாயில்லை. எப்படிப் போக வேண்டும்?"

"இப்படி லெப்ட்டில் திரும்பி.. ரைட்டில் போனால் ஆறாவது பில்டிங்."

இடதுபக்கம் திரும்பினார். எல்லாமே மேல்தட்டு மக்கள் குடியிருக்கும் பங்களாக்கள். அதில் ஒரே ஒரு வீடு மட்டும் பழைய பாணியில் இருந்தது. அதன் பழமையை மறைப்பதற்காகவோ என்னவோ அதன் சுவர்களில் அங்கங்கே கொடிகள் தொங்கிக் கொண்டிருந்தன.

என்ன இது திருஷ்டிப் பரிகாரம் என்கிற மாதிரி அந்த வீட்டை உன்னிப்பாகப் பார்த்தபோது, வீட்டின் முகப்பில் ஏதோ ஒரு நீலக்கலர் எனாமல் போர்டு தொங்கியது தெரிந்தது. போர்டை பச்சைக் கொடிகள் அங்கங்கே மறைத் திருந்தன.

துரையரசன் போர்டை உன்னிப்பாகப் பார்த்தார்.

'கஸ்தூரி ஸ்ரீனிவாசன் நினைவு நூலகம். அண்ணா நகர்' என்று போர்டு தெரிவித்தது.

நூலகம். லைப்ரரி.

சசிதரன் சொன்ன குறிப்பு வார்த்தைகளில் ஒன்று. இந்த லைப்ரரி, புவனா வேலை செய்யும் குழந்தைகள் காப்பகத்திற்குப் பக்கத்தில் இருக்கிறது. இதுகூட கேஸுக்கு உதவலாம்.

துரையரசன் புல்லட்டை நிறுத்தினார். இறங்கினார். நூலகத்தின் உள்ளே நுழைந்தார். லைப்ரேரியன் கண்ணாடி அணிந்து கொண்டு, ஒற்றை நாடியாக இருந்தான். இளைஞன். ஊதினால் விழுந்து விடுவான் போலத்தான் இருந்தான். அவன் முன் பற்கள் இரண்டு மேலுதட்டை மீறியிருந்தன.

துரையரசன் தன் அடையாள அட்டையைக் காட்டினார். படித்தவுடன் அவன் உடல் நடுங்கத் தொடங்கியது.

''நான் என்ன செய்ய வேண்டும் சார்?'' என்றான்.

''நான் இங்கே வந்து விசாரித்ததை ரகசியமாக வைத்துக் கொள்ள வேண்டும்.''

''சரி சார்.''

''பக்கத்தில் ஜவஹர் குழந்தைகள் காப்பகம் இருக்கிறதே, தெரியுமா?''

''தெரியும் சார்.''

''அங்கிருந்து யாராவது இங்கே வருவார்களா?''

''மிஸஸ் புவனநாயகி என்று ஒரு லேடி வருவார்கள் சார்.'' துரையரசன் தனக்குள் மத்தாப்பூவானார்.

''என்ன செய்வார்கள்?''

''புத்தகம் எடுத்துப் போவார்கள் சார்.''



''அப்படியா? அவர்கள் சமீபத்தில் என்ன புத்தகமெல்லாம் கொண்டு போயிருக்கிறார்கள் என்று சொல்ல முடியுமா?

''இதோ சார்'' என்று அவன் இன்ஸ்பெக்டரை ஒரு நாற்காலியில் உட்கார வைத்தான். ஒரு ஷெல்ப்பைத் திறந்தான். புரட்டினான்.

அவரிடம் வந்தான். ஒரு சின்னக் காகிதத்தை நீட்டினான்.

அவள் எடுத்துப் போய்க் கொண்டு வந்து கொடுத்த புத்தகங்களின் தலைப்புகள்.

விஷங்கள்.

விஷத் தாவரங்கள்.

துரையரசன் அந்தப் புத்தகங்களைக் கொண்டுவரச் சொன்னார். கொண்டு வந்தான். புரட்டினார். 'விஷங்கள்' என்ற புத்தகத்தில் ஆர்சனிக் விஷம் பற்றிய எல்லா விவரங்களும் இருந்தன. அது எப்படி மனித உடலில் செயல்படும். எப்படி ஆளைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கொல்லும் என்பது பற்றி எழுதப்பட்டிருந்தது. சில வரிகளின் கீழே பென்சிலால் கோடு போடப்பட்டிருந்தது. ஆர்சனிக் விஷம் தாவரங்களுக்குக் குறிப்பாகப் பாசியை அழிக்கப் பயன்படுத்தப்படுவது பற்றி அதில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருந்தது.

துரையரசன் அந்தப் புத்தகத்தை எடுத்துக் கொண்டார்.

புறப்பட்டார்.

# 12

துரையரசனை திடீரென ஓர் உலக மகா உற்சாகம் வந்து தொற்றிக் கொண்டது. மீன் படத்திற்கும், லைப்ரரி என்ற வார்த்தைக்கும் விடை கிடைத்துவிட்டது. இனி மேல் இரண்டே இரண்டு வார்த்தைகள் தான். ஜுவல்லரி, கவிதை.

முதல் இரண்டுக்குக் கிடைத்த மாதிரியே இதற்கும் கிடைக்கும் என்று தோன்றியது அவருக்கு. ஜுவல்லரி என்றால் நகைக்கடை, நகைக்கடைக்கும் இந்த கேஸிற்கும் என்ன சம்பந்தம்? எதனால் சசிதரனுக்கு இந்த வார்த்தை தோன்றியது.

பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸ் கம்பெனி மீது வழக்குப் போடுவதற்காக புவனநாயகியின் பாஸ்போர்ட் சைஸ் போட்டோக்கள் எல்லாம் எடுத்து வைத்திருந்தார் இன்ஸ்பெக்டர். அதில் ஒரு போட்டோவை எடுத்துக் கொண்டார்.

ஒவ்வொரு நகைக்கடையாக ஏறி இறங்கினார்.

"இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?"

"ஸாரி சார்."

"ப்ச். நோ ஐடியா?"

"எவ்வளவோ கஸ்டமர்கள் வருகிறார்கள் சார். நாங்கள் எப்படி ஒரு முகத்தை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்ள முடியும்? ஏதோ ரெகுலர் கஸ்டமர் என்றால் ஞாபகம் இருக்கும். ஸாரி சார் தெரியவில்லை."



எல்லாக் கடைகளிலும் இதே பதில்கள். துரையரசன் தளரவில்லை. ஜுவல்லரிக்கும் அவளுக்கும் ஏதாவது ஒரு சம்பந்தம் இருந்தே தீர வேண்டும் என்று அவருக்குத் தோன்றியது.

மாலை மயங்கி இருள் உள்ளே நுழையும் நேரம் அவர் பாரிமுனையில் இருந்த ஒரு ஜுவல்லரியில் நுழைந் தார்.

"இந்தப் பெண்ணை உங்களுக்குத் தெரியுமா?"

"நாயகி."

"ஆம். நாயகிதான். நாயகியேதான். உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"இந்தப் பெண் அனாதை ஆசிரமத்தில் இருக்கும் பெண் சார். எங்கள் கடையில் வேலை கேட்டு வந்தது. எங்களிடம் வேலை எதுவும் காலி இல்லை. ஆனால், அவள் முகம், உடலமைப்பு எல்லாம் வசீகரமாக இருக் கவே எங்களுக்கு மாடலாக இருக்கச் சம்மதமா என்று கேட்டோம். சம்மதித்தது. போஸ் கொடுத்தாள். நாங்கள் அந்தப் பெண்ணுக்கு விதவிதமான நகை அலங்காரம் பண்ணி விளம்பரப் படம் எல்லாம் எடுத்திருக்கிறோம். இப்போது கூட ஒரு பதினைந்து நாட்களுக்கு முன்னால் இதை வைத்து ஒரு படமெடுத்தோமே. கல்யாணம் ஆகி விட்டது இந்தப் பெண்ணுக்கு. கல்யாணத்திற்கு அப்புறம் போஸெல்லாம் கொடுக்க மாட்டேன் என்று சொன்னாள். நாங்கள் இன்னொரு மாடலை எங்கே போய்த் தேடுவது என்று இதையே போனில் இரண்டு மூன்று தடவை கேட்டு ஒத்துக் கொள்ளச் செய்தோம்."

''அப்படியா, நான் எந்த விளம்பரத்திலும் பார்த்த ஞாபகமே இல்லை.''

''நாங்கள் முகத்தையே காட்ட மாட்டோம் சார். எல்லாமே நைட் லொகேஷன் தான். நகைக்கு மட்டுந் தான் முக்கியத்துவம் கொடுப்போம். அதனால் தெரிந்திருக் காது.''

அதெல்லாம் சரி, இந்த ஜுவல்லரிகாரர்களுக்கு புவனாவை, நாயகியாய்த் தெரிந்திருக்கிறது. ஆனால் இந்தக் கேஸிற்கும் இந்தக் கடைக்கும் என்ன சம் பந்தம்?

''பதினைந்து நாட்களுக்கு முன்னால் வந்ததாகச் சொல்கிறீர்களே. என்ன எடுத்தீர்கள்?''

''விளம்பரப் படம் சார். பத்து செகண்டிற்கு.''

''அதை எனக்குப் போட்டுக் காட்டுங்கள்.''

பார்த்தார். படத்தில் நாயகி இருட்டடிக்கப் பட்டிருந் தாள். அவள் உடல் வளைவுகள் மட்டும் பிரதானமாகப் படமாக்கப்பட்டிருந்தன. அந்த வளைவுகளில் அவள் அணிந்திருந்த நகைகள் படத்தில் முக்கியமாகத் தெரிந் தன. மற்றபடி பத்து செகண்ட் படத்தை பத்து முறை பார்த்தும் துரையரசனுக்கு அதில் ஒன்றும் தெரிய வில்லை.

''ஷூட்டிங் எங்கே நடந்தது?''

''முதல் மாடியில் தான். ஒரு ஹாலை ஸ்டூடியோவாக மாற்றி வைத்திருக்கிறோம்.''

''அங்கே போகலாம்.''

போனார்கள். ஸ்டூடியோவில் நுழைந்ததும் அவர் பார்வை முதலில் ஸ்டூடியோவின் கண்ணாடிச் சுவருக்



கப்பால், சாலையின் எதிர்ச் சாரியில் மின்னி மின்னி அணைந்த அந்த நியான் சைன் மீது பட்டது.

சுகம் மருந்துக்கடை - நீலம்.

சுகம் மருந்துக்கடை - பச்சை.

சுகம் மருந்துக்கடை - சிவப்பு.

சுகம் மருந்துக்கடை - நீலம்.

சுகம் மருந்துக்கடை - பச்சை.

சுகம் மருந்துக்கடை - சிவப்பு.

துரையரசன் ''பன்டாஸ்டிக்'' என்றார்.

அந்த சுகம் மருந்துக்கடைதான் விஷம் கலந்த காப்ஸ்யூல்களை வைத்திருந்ததாகச் சொல்லப்படும் கடை. அந்த கடையில் இருந்தவர்களைத்தான் துரை யரசன் உண்டு இல்லை என்று ஆக்கியிருந்தார்.

துரையரசன், தடதடவென்று படிகளில் இறங்கி னார்.

சாலையைக் குழந்தை போல இரு பக்கமும் கவனி யாமல் கடந்து ஓட, ஒரு பால்காரன் திடீர் பிரேக் போட்டு, துரையரசனை திட்ட வாயெடுத்து, துரையரசன் இன்ஸ் பெக்டர் என்பதை அவருடைய சீருடையில் இருந்து புரிந்துகொண்டு, தன்னுடைய திட்டலை நெஞ்சுக்குள் புதைத்துக் கொண்டான்.

துரையரசனைப் பார்த்தவுடன் சுகம் மருந்துக்கடை ஆசாமியின் முகம் பயத்தில் வெளிறியது. அவர் கை இரும்பால் ஆனது என்ற முடிவுக்கு ஏற்கனவே வந்தவன் அவன் - அடிபட்டு.

''ஸாரி ப்ரெண்ட் நான் பயப்படுத்த வரவில்லை. ஒரே ஒரு விசாரணை'' என்றார் துரையரசன் அவன் பயத்தை போக்குகிற மாதிரி.

''என்ன சார்?'' என்றான் குரல் நடுக்கத்துடன் அவன்.

''இந்தப் பெண்ணைத் தெரியுமா உனக்கு?'' என்று போட்டோவைக் காட்டினார் துரையரசன்.

பார்த்தான்.

''ஐயோ, பெரிய ரோதனை புடிச்ச கிராக்கி சார் இந்தப் பொண்ணு'' என்றான்.

''என்னப்பா சொல்கிறாய்?''.

''இந்தப் பொண்ணு எங்க கடைல வந்து அந்த வைட்டமின் காப்ஸ்யூல் வேணும்னு கேட்டது சார். ஒவ்வொரு பாட்டிலா வாங்கி எக்ஸ்பைரி டேட் என்ன ஏதுன்னு நோண்டி நோண்டிப் பாத்து, என்னைப் பெண்ட் எடுத்துட்டாங்க சார். நான் அஞ்சி தரம் உள்ள போய் வெளிய வந்தேன். மருந்தெல்லாம் எக்ஸ்பைரி ஆனப் பறம் குடுத்தா உடம்பு கெட்டுடும். அது இதுன்னு பேசிட்டு, கடைசில அஞ்சி பாட்டில் வாங்கிட்டுப் போச்சி.''

''இதை ஏன் மேன் விசாரணையின்போது நீ சொல்ல வில்லை?''

''இந்த மாதிரி கஸ்டமர்கள் நம் கடைக்கு நிறைய பேர் வருவாங்க சார். என்னன்னு சொல்றது. எங்களுக்கு இந்தப் பொண்ணு ஆயிரம் கஸ்டமர்ல ஒரு கஸ்டமர். அதுக்கு முன்னாலயும் பாத்ததில்ல. அதுக்குப் பின்னாலயும் பாத்த தில்ல...''



''ரைட் கோர்ட்டுக்குக் கூப்பிட்டு, சாட்சிக் கூண்டில் நின்று நீ இதையே சொல்வாயா?''

''தாராளமாய்'' என்றான் அவன்.

எனவே, திருமதி புவனநாயகி, தன் வீட்டிலேயே காப்ஸ்யூல்களில் ஆர்சனிக் விஷம் நிறைந்த பவுடரை நிரப்பி, இங்கே கொண்டு வந்து, கடைக்காரனைக் குழப்பி, விஷம் நிறைந்த காப்ஸ்யூல்களை இங்கே வைத்து விட்டுப் போயிருக்கிறாள். எதற்காக அப்படிச் செய்தாள்? கடையில் வாங்கிய மருந்திலேயே விஷம் இருந்தது என்று நிரூபிப்பதற்காக அப்படிச் செய்து தொலைத் திருக்கிறாள். பாவி. அதனால் அனாவசியமாக இன்னொரு உயிரும் அல்லவா போய் விட்டது.

துரையரசன் கடைசியில் மிச்சமிருந்த கவிதையைத் தேடி ஓடினார்.

## 13

''தமிழில் சமீபத்தில் என்னென்ன புத்தகங்களில் கவிதை வெளிவந்து கொண்டிருக்கிறதோ அத்தனை புத்தகங்களும் எனக்கு வேண்டும்'' என்ற அவரது வேண்டுகோளைக் கேட்டு கடைக்காரன் அவரை ஆச்சரிய மாகப் பார்த்தான்.

கேள்வி எதுவும் கேட்காமல் எடுத்து வைத்தான்.

துரையரசன் அத்தனை புத்தகங்களையும் ஜீப்பில் கொண்டு போய் ஏற்றச் சொன்னார். தன் ஆபீஸ் வந்ததும்

கால் கிலோ வேர்க்கடலை வாங்கி வரச் சொன்னார். ஒரு ப்ளாஸ்க் நிறைய டீ தருவித்தார்.

உட்கார்ந்து ஒவ்வொரு புத்தகமாய்ப் புரட்டத் தொடங்கினார்.

தூக்கம் வந்து அவரைத் தள்ளும் நேரம். அவர் அந்தப் புத்தகத்தைப் பார்த்தார். கோவையிலிருந்து 'அருவி' என்ற பெயரில் வெளிவந்து கொண்டிருந்த கவிதை இதழ். காலாண்டுக்கொரு முறை.

ஆசிரியர் குறிப்பில், 'இந்த இதழில் இடம் பெற்றிருக் கும் கவிதைகள் அனைத்தும், கவிஞர்களின் கையெழுத்தி லேயே வெளியிடப் பட்டிருக்கின்றன' என்றிருந்தது.

புரட்டினார், பத்தாவது பக்க கவிதை பார்வையை நிறுத்தியது.

*இதோ எந்தன் இறுதி ஆசை,*
*இலக்கில்லாப் பயணம் இனி இல்லை.*
*வேலைக்குப் பட்டமில்லை.*
*வயிற்றுக்கு சோறில்லை.*
*காதலிக்கக் காசில்லை.*
*இலக்கில்லாப் பயணம் இனி இல்லை.*
*நான் மன்மதனை நேசிப்பதை விட்டு*
*மரணத்தை யாசிக்கிறேன்.*
*வந்துவிடு. தழுவிவிடு.*
*பூமியில் புதைகிறேன்.*
*மண்மேல் இருப்பதைவிட*
*மண்கீழ் உரமாய் மாற விரும்புகிறேன்*

*- கவிதைக்காரன்*



அந்தக் கவிதையின் கையெழுத்து. அதே கையெழுத்து. புரொபசர் எழுதியதாகச் சொல்லப்படும் அதே கையெழுத்து.

''யுரேக்கா'' என்று எழுந்தார் துரையரசன். ''டேய். யாரங்கே, இந்த கவிதைக்காரனின் முகமூடியைக் கிழித்து முகவரியைக் கண்டுபிடித்து வா'' என்றார் கவிதை யாக.

புரசைவாக்கத்தில் இருந்தது கவிதைக்காரனின் குடில். அவன் பெயர் சுந்தர மணவாளன் அயோக்கிய சிகா மணிகள். பெயர் வைத்துக் கொள்வதில் ஒன்றும் குறையே வைத்துக் கொள்வதில்லை.

நிஜமாகவே அது ஒரு குடில்தான். ஓட்டு வீடு. ஒரு ஜன்னல், மூடுவதற்குக் கதவின்றி திறந்திருந்தது. அந்த ஜன்னல் சாலையைப் பார்த்து இருந்ததால் துரையரசன் உள்ளே எட்டிப் பார்த்தார்.

*அவன் ஒரு லாந்தர் விளக்கின் வெளிச்சத்தின் கீழ் அமர்ந்திருந்தான். சுருட்டை முடி. கண்ணாடி. அவன் முகத்தை ஒரு மாதிரி திருப்பிச் சிந்தனையில் ஆழ்ந்திருந்த கோணத்தில், லாந்தர் விளக்கின் மஞ்சள் வெளிச்சம் அவன் அணிந் திருந்த கண்ணாடியின் ஒரு பக்கத்தில் மட்டும் பட்டுப் பிரதிபலித்துக் கொண்டிருந்தது - மஞ்சளாக நெருப்பாக.*

அவன் முகத்தில் சுருள் சுருளாக முடி. அறையில் அவனைச் சுற்றி புகை இருந்தது. புகையின் வாசனையில் இருந்து அது கஞ்சாவின் புகை என்பது துரையரசனுக்குத் தெரிந்து போனது. சுந்தர மணவாளன். கவிதைக்காரன். அட, அட, அட.

துரையரசன் கதவை இடித்தார்.

''யார்?'' என்று உள்ளிருந்து குரல் வந்தது.

''உங்கள் கவிதையைப் பாராட்டிப் போக வந்த ரசிகன்'' என்றார் துரையரசன். கதவு திறந்தது.

அவன் எதிரில் நின்றான். துரை அரசனை போலீஸ் உடையில் பார்த்ததும் அப்படி ஒன்றும் அதிர்ச்சி அடைந்த மாதிரி தெரியவில்லை.

''வாருங்கள். கவிதை வேண்டுமா கவிதை? சொல்லட்டுமா?''

கோப்பையுண்டு,
மதுவுண்டு.
கோடி கோடி ஆசையுண்டு.
கூடிக்குலாவ குறுநகையாள் இல்லை.
'புகையுண்டு.
போதையுண்டு.
புரட்டிப் பார்க்க நானுண்டு.
புரண்டு ஆட புன்னகையாள் இல்லை.
நானுண்டு. நீ யில்லை.
வானுண்டு. தரையில்லை.
முகிலுண்டு. மழையில்லை.
நிலவுண்டு. ஒளியில்லை.
காற்றுண்டு. களிப்பில்லை.
காதலுண்டு. காசில்லை.
தவிப்புண்டு. அணைப்பில்லை.
தனிமையுண்டு. தாரகையில்லை.



தனிமை தரும் நரகமுண்டு.
வானேகுகிறேன் வா.
சொர்க்கம் தேடுகிறேன். தா.
எப்படி? எப்படி சார் என் கவிதை?''

துரையரசன் பளார் என்று அவனை அறைந்தார். அவன் திகைத்தான். திடுக்கிட்டான். தெளிந்தான். அடிபட்ட கன்னம் பற்றினான்.

''யார்... யார் சார் நீங்கள்?'' என்றான்.

''கவிதைக்காரா. எல்லாவற்றையும் சொல்லிவிடு. புவனாவும் நீயும் சேர்ந்து போட்ட சதியைச் சொல்லா விட்டால் உன்னை அடித்து உதைத்தே அதை வர வழைப்பேன். சொல்'' என்றார் துரையரசன்.

அவன் கீழே அமர்ந்து முழங்காலில் முகம் புதைத்து அழத் தொடங்கினான்.

# 14

''நானும் சுந்தரும் காதலித்தோம். இருவருமே அனாதைகள்தான். இருந்தாலும் ஏழைகள். சேர்ந்து வாழ்ந்தாலும் சோறுக்கு என்ன செய்வது என்று எங்களுக்கு நிறைய கவலை. சுந்தர் டிகிரி படித்தவன். வேலை கிடைக்கவில்லை என்று டிகிரி சர்ட்டிபிகேட்டைக் கூடக் கிழித்துப் போட்டு விட்டான். நிறைய கவிதை எழுதுவான். கவிதை வரும். காசு வராது. நான் அவ்வப்போது மாடலிங் செய்து சம்பாதித்தேன். ஆனால், பற்றவில்லை.

என் படிப்புக்கு யாரும் சரியாக வேலை தரவில்லை. எல்லோருக்கும் என் உடல் தேவையாய் இருந்தது. என் அழகின் வலிமையைப் பரிசோதிக்க எண்ணினேன். சத்ரபதியிடம் போனேன். கல்யாணமாகாதவர். ஆனால், பிரம்மச்சாரி இல்லை. சபலக்கேஸ். என் அழகு அவரை வீழ்த்தியது.

என்னை பி.ஏ. என்றார். நான் காதல் என்றேன். ஒத்துக் கொண்டார். கல்யாணம் செய்து கொண்டார். அண்ணா நகரில் வீடு கிடைத்து விட்டது. ஆனால், சத்ரபதி செத் தால்தான் எனக்கு வீடு கிடைக்கும். கூடவே கொஞ்சம் பணமும் கிடைத்தால் நன்றாக இருக்கும் என்று நினைத் தேன். எப்படியும் சத்ரபதியைச் சாகடிப்பது. அவருக்குப் பின்னால் வாரிசாக சொத்தடைந்து அத்துடன் நானும் சுந்தரமும் வாழ்வது என்றுதான் திட்டம்.

மாட்டிக் கொள்ளாமல் கொல்வதெப்படி என்று யோசித்தேன். அவர் பாடனி புரொபசர். மீன் தொட்டிப் பாசியைப் போக்க அவர்தான் ஆர்சனிக் கலந்த ஒரு பாசிப் போக்கியை வாங்கி வரச் சொன்னார். அது எந்த அளவுக்கு விஷம் என்று தெரிந்து கொள்ள லைப்ரரி போனேன். படித்தேன். ஆளை மெல்ல மெல்லக் கொல்லும். ஆனால், உடலில் விஷமேறியிருப்பதை வெளியில் சொல் லாது கொல்லும். போஸ்ட் மார்ட்டத்தில் விஷம் இருப்பது தெரியும் என்று படித்தேன். நான் மாட்டக் கூடாது என்பதால் காப்ஸ்யூலில் விஷத்தைப் போட்டேன். அதற்கு முன்பே இன்ஷ்யூரன்ஸ் பாலிசி எடுக்கச் சொன் னேன். எடுத்தார். சத்ரபதிக்கு உடம்பு சரியில்லாமல் போனவுடன் நான் உடல் தேற மருந்து தருகிற மாதிரி விஷக் காப்ஸ்யூலைக் கொடுத்தேன். அவர் செத்துப்



போனார். லோக்கல் டாக்டர் வந்து ஹார்ட் அட்டாக் என்று சொல்லிவிட்டார்.

அப்புறம் அவரிடம் போஸ்ட் மார்ட்டத்திற்கு ஏற்பாடு செய்யச் சொல்ல முடியாது. அதனால் சுந்தரிடம் அவர் எழுதுகிற மாதிரி எழுதித் தரச் சொல்லி ஒரு லெட்டர் வாங்கி, கார்ப்பரேஷனிடம் கொடுத்து, தோட்டத்தில் சத்ரபதியின் உடலைப் புதைக்க அனுமதி வாங்கினேன். நாளை எப்படியும் அவர் உடலை வெளியே எடுத்து போஸ்ட் மார்ட்டம் செய்ய வேண்டி வரும் என்பதால், ஏற்கனவே என் மீது சந்தேகம் வரக்கூடாது என்பதற்காக, ஐந்து விஷக் காப்ஸ்யூல் பாட்டில்களை சுகம் மருந்துக் கடையில் கொண்டு போய் வைத்து விட்டேன்.

எப்படியும் யாராவது இறந்துதான் ஆக வேண்டும். நியூஸ் வெளியில் வந்து தான் ஆக வேண்டும் என்று காத்திருந்தேன். நீரஜா பாரீசில் வேலை செய்பவள். அதே மருந்துக் கடையில் காப்ஸ்யூல் வாங்கிச் சாப்பிட்டு செத்துப் போயிருக்கிறாள். அந்த நியூஸ் வந்தவுடன் நான் போலீசுக்கு போன் செய்தேன். மருந்துக் கடைக்காரர்கள் தான் ப்ராடு செய்கிறார்கள் என்று இன்ஸ்பெக்டர் நம்ப வேண்டும் என்பதற்காக, அவரையும் சுந்தரை வைத்து ஒரு தாக்கு தாக்கினேன்.

நான் வாழ நினைத்தேன். என் காதலனையும் வாழ வைக்க நினைத்தேன். ஆனால் மாட்டிக் கொண்டேன். இது சுய நினைவுடன் நான் கொடுக்கும் வாக்கு மூலம்.''

டக். ''அவ்வளவுதான் ஆட்டம் க்ளோஸ்'' என்று சொல்லிக் கொண்டே கழன்று கொண்டிருந்த டேப்ரிகார் டரை நிறுத்தினார் துரையரசன்.

"அப்புறம்?" என்றான் சசிதரன்.

"அந்தப் பெண் தன் சொந்தக் கல்லறையில் ஒரு காலை வைத்துக் கொண்டு இவ்வளவு வேலை செய்திருக்கிறது. கேஸ் நடக்கும். தூக்கு தண்டனையோ, ஆயுள் தண்டனையோ... ஏதோ ஒன்று கிடைக்கும். என்னைப் பொறுத்தவரை கேஸ் ஓவர். பாவம் அந்தப் பெண் காவ்யா தான் அனாதையாகி விட்டது. பெஸ்ட் பார்மாசூட்டிகல்ஸின் எம்.டி. அந்தக் குழந்தையின் பேரில் பத்து லட்ச ரூபாய் பணத்தைப் பாங்கில் போட்டுக் கொடுத்திருக்கிறார். அதன் வாழ்க்கைக்கு வசதி."

"கவிஞன் என்ன ஆனான்?"

"கம்பிக்குப் பின்னால் கவிதை எழுதுகிறான். அவனும் கொலைக்குத் துணை போனவன் தானே? என்ன இப்போது கஞ்சா சப்ளை கட்டாகி விட்டது."

"அனந்த நாராயணன்?"

"இன்ஷ்யூரன்ஸ் ஆசாமியா? அவனுக்கென்ன... அவனுக்கு டபிள் இன்க்ரிமென்ட். பிரமோஷன். மாருதி கார் ஸ்டாண்டர்ட் 2000 ஆகி விட்டது. டிரைவர் வேறு. தோட்டத்துடன் பெரிய மாளிகை. நமக்குத்தான் டிபார்ட்மென்டில் கவனிப்பே இல்லை. விடு சசி. போர்டில் காயடுக்கு. நாம செஸ் விளையாடி ரொம்ப நாளாகிறது."

அவர்கள் ஆட்டத்தில் ஆழ்ந்திருக்கிறார்கள்.

அவர்களைத் தொந்தரவு செய்யாமல் கொஞ்ச நேரத்திற்கு விலகிக் கொள்வோமே! ஓ.கே.? ஓ.கே!